# தமிழ்ச்சோலை

## கவிதை மலர்-1

ஆசிரியர் :

மகா மதுரகவி


வீ. வே. முருகேச பாகவதர்

## சமர்ப்பணம்.

பேரார் பம்பாய் பெருந்தா ராவிப்
பாரார் புகழும் பழந்த மிழர்தம்
ஏரார் அன்புக் கீடாய் இந்நூல்
சீரார் சமர்ப்பணம் செய்தேன் கனிந்தே!

—ஆசிரியர்.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 1514
நன்கொடை எண்: 1514



மகா மதுரகவி

வீ. வே. முருகேச பாகவதர்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.

# தமிழ்ச் சோலை

## கவிதை மலர்—க

103

ஆசிரியர் :

மகா மதுர கவி
**வீ. வே. முருகேச பாகவதர்.**
[ஆதிதிராவிட சமூக சீர்திருத்தம், அறிவானந்தம், சுயமரியாதை, சமதன்மம், சன்மார்க்கம், ஞானரசம், மதுவிலக்கு, சென்னை சிங்காரம், மாதருரிமை, வெள்ளப்பாடல் முதலிய பன்னூலாசிரியர்]

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி. க. சண்முகம் நூலகம்.
திருப்பரங்குன்றம்

கிடைக்குமிடம் :
"மங்கள நிலையம்"
1. T. பிளாக் அலெக்சாண்டர் கிராமம், பெரம்பூர் பூராக்ஸ்,
சென்னை.

உரிமை பதிவுசெய்யப்பட்டது] 1946 [விலை ரூ. 1.

# ஆக்கியோன் முன்னுரை

---

இந்நூலிலுள்ள பாக்கள் பலதிறப்பட்டவை; என்பொது வாழ்வுக் கிடையில் கிடைக்கப் பெற்றக் குறுகிய அவ காசத்தின் போதெல்லாம் எழுதி வைத்தவை; சில செய்தித் தாள்களில் வெளி வந்தவை; "திராவிட வீரன்" நாடகத்தில் இசைக்கப் பெற்றவை; பல இன்னிசை யரங்குகளிற் பாடப் பெற்றவை; அவற்றின் தொகுப்பே இந்நூல்.

3-3-46 ல்-பம்பாய் தாராவி தென்னிந்திய ஆதி திரா விட மகா ஜன சங்க ஆண்டு விழாவுக்குத் தலைமை வகித்த போது மகா ஜன சங்கத்தார்—மற்றும் பலக் கழகத்தார்—அன்பர்கள்—தோழர்கள் அளித்த பண முடிப்பின் துணை கொண்டு வெளியிடப் பட்டதே இத் "தமிழ்ச் சோலை" கவிதை மலர் முதற் பாகம்.

இதன் கண், ஒரே கருத்துக்கள் சில வெவ்வேறு பாக் களில் உள்ளன. இதைத் தனித் தனி இராகங்களில் இசைக் கும்போது சரிபட்டு விடும். குற்றங் களைந்து குண நோக்கக் கோருகிறேன்.

இந் நூலை ஒவ்வொரு தமிழர்களும் படித்து, தீண்டாமை-வறுமை-மடமை இவை போன்ற பலக் கொடுமைகளை அறம்வ அழித்து, இன்புற்று வாழ வேண்டு மென்பதே நமது விருப்பம்.

என் உள்ளத்தே எழும் கவிதையை சேர்த்து மாலையாகத் தொடுத்து (எழுதி)க் கொடுக்கும் எனது இன்ப வாழ்க்கைத் துணைவி பகவதி அம்மைக்கு என் நெஞ்சுகந்த நன்றி.

வி. வே. முருகேசன்.

# முகவுரை

சமுதாய சீர்திருத்த துறையில் நீண்ட நாட்களாக உழைத்து வரும் என் நண்பர் தோழர் வி. வி. முருகேச பாகவதர் அவர்கள் சிறந்த தமிழ்ப் பற்றும், புலமையும் கொண்டவர். அரிய பெரிய கருத்துக்களை, எளிய, இனிய முறையில் நாட்டு மக்களுக்கு எடுத்துரைத்து மக்கள் நல் வாழ்க்கை பெறுவதற்காக பெரு முயற்சி எடுத்துக் கொள்ளும் பண்புடையவர். அவர் தமது ஆழ்ந்த அனுபவத்தையும் சிறந்த கவித் திறனையும் துணை கொண்டு "தமிழ்ச் சோலை" என்ற நூலை வெளியிட்டிருக்கிறார். 'தமிழ்ச் சோலை' யில் அரிய கருத்துக்கள் கொண்ட பல மலர்கள் உள்ளன. மக்கள் எளிதில் பாடத் தக்க 'மெட்டுகள்' கொண்ட பாடல்களும், மற்றும் பல கவிதைகளும் கொண்ட தமிழ்ச் சோலையில் பழங்குடி மக்களின் நிலைமை, பாட்டாளிகளின் துயரம், விதவைகள் விசாரம் ஆகிய பல கருத்துகளும் சமுதாய நிலைமையை விளக்கும் சிறு கவிதைக் கதைகளும் உள்ளன. இவை மக்களுக்குப் புத்தறிவு பிறக்கவும், புது வாழ்வு பெறவும் உதவும். சிறந்த உவமைகளும், இனிய வர்ணனைகளும் கொண்டுள்ள இக் கவிதைகளைப் பெற்றுத் தமிழர் பெரும் பலன் அடைவார்கள் என்று நம்புகிறேன். மூடப் பழக்க வழக்கங்கள் ஒழிந்து, ஜாதி பேதம் நீங்கி மக்கள் புது நிலை அடைய வேண்டுமென்று பாடுபடும் சீர்திருத்த வாதிகளின் வேலைக்கு, இந்த கவிதை பெருந் துணை புரியும். இத்தகைய நூலை மக்கள் ஆதரித்து கவிஞரை மேலும் மேலும் ஊக்குவிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

C. N. அண்ணாத்துரை, M. A.
"திராவிட நாடு" ஆசிரியர்.

# சிறப்புரைகள்

"இளங்கோவன்" தமிழ்ப் பேசும் பட கதை, வசன எழுத்தாளர்.

மகா மதுர கவி திரு.—முருகேச பாகவதர் தாம் எழுதிய 'தமிழ்ச் சோலை' கவிதை மலரை என்னிடம் காட்டிய பொழுது, நான் சற்று ஊக்கக் குறைவுடன் தான் அதைப் படிக்கத் தொடங்கினேன்..........நாலைந்து வரிகளைத் தாண்டியதும், நூலின் 'கனம்' எனக்குத் தெரிய ஆரம்பித்தது.................நாட்டில் 'அறிவுக்குத்தான் பஞ்சம்,' என்று கவிஞர் தைரியமாகச் சொல்லி யிருப்பதைக் கண்டதும், எனக்கு உண்மையில் அவரிடம் கொஞ்சம் பற்று ஏற்படலாயிற்று. அதன் மீது நூல் முழுவதையும் படித்தேன், ரசித்தேன், சிந்தித்தேன்............இன்னும் அவர் கவிதைகளைப் பற்றி சிந்தித்துக் கொண்டுதானிருக்கிறேன். 'இதுவோ பக்தி' என்று அவர் எழுதி இருக்கும் கவிதையில், "அவ்வேழையும் ஒரு கல்லாய் இருந்திடில் துதிப்பார்கள் சாமியாய் சுயவறிவற்றவர்" என்ற வரிகள் என்னைத் தூக்கி வாரிப் போடத்தான் செய்தன. ..............ஆனாலும், அதிக்கிரமத்தைக் கண்டு வீறலிட்டெழும் இதயத்தின் ஒலியில் சற்றுக் கடுமை இருப்பது இயற்கைத்தானே யென்பதை உணர்ந்தபோது, உள்ளம் மறு கணம் சாந்தி கண்டது............'மோட்ச நரகம்' 'தமிழன் அன்றும் இன்றும்' 'தொழிலாளர் துயரம்' 'உழவனின் உயர்வு' என்ற கவிதைகளின் மூலமாக கவிஞர் நாட்டின் வீழ்ச்சியைக் கண்டு எப்படித் துடி துடிக்கிறார் என்பதை எவரும் எளிதில் உணர்ந்து கொள்ள முடிகிறது..........'கண்ணின் சிறப்பு' 'தாமரைப் பெண்'—முதலியன கருத்துக்கு விருந்தளிப்பனவேயாகும்,....'எமகண்டம்' 'பல்லி விழுந்த பலன்'—முதலியன நகைச் சுவை சித்திரங்கள்......பெரும்பாலான கவிதைகள்—நாட்டின் தற்போதைய நிலைமைக்கு இன்றியமையாதவை......கவியின் ஆழ்ந்த கருத்துகளும், ஆவேசமும், சொற் கோவைகளும் தமிழர் மனத்தைக் கவராமலிருக்க முடியாது..........கவிஞர் திரு. முருகேசனார் மேலும்மேலும் இம்மாதிரி நூல்களை நாட்டிற்கு அளிக்க வேண்டுமென்பதே எனது பிரார்த்தனை—கவியிடமல்ல— தெய்வத்திடம்.

T. சண்முகம், செங்கற்பட்டு மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர்.

"தமிழ்ச் சோலை" என்னும் கவிதை மலர் ஆசிரியர் மகா மதுர கவி முருகேச பாகவதரைப் பற்றி குறைந்தது 25 ஆண்டுகளாக அறிவேன். இவர் நினைத்த மாத்திரத்தில் கவி பாடும வன்மை யுடையவர். மேலும் பொது வாழ்க்கை யில் முக்கியமாக தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத் திற்கு அரும்பாடு படுபவர்களில் இவரும் ஒருவர். இவர் இந் நூலை இயற்ற முன் வந்ததைக் குறித்து நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். இதை எல்லோரும் படித்துப் பயன் பெற வேண்டு மென்பதே எனது பேரவா.

* * * *

ஜனாப் M. S. காதர் மொயிதீன், முன்னைய கவுரவ நீதிபதி செம்பியம்.

உணர்ச்சி தரும் விருத்தங்கள்—எழுச்சி தரும் பல்லவி கள்—மீட்சி தரும் புத்துலகப் புரட்சிப் பாக்கள் கொண்டது "தமிழ்ச் சோலை கவிதை மலர்." பேச்சு—இசை—நடிப்பு—உரை நடை—கவிகள் இவற்றால், காந்தம் இரும்பை இழுப் பதைப் போல மக்களை வயப்படுத்தும் தனி ஆற்றல் நிறைந் தவர், இதன் ஆசிரியர் உயர்திரு மகா மதுர கவி முருகேச பாகவதரவர்கள். மக்களின் அறிவுக்கும், முன்னேற்றத்திற்கும் முட்டுக்கட்டையா யிருக்கும் மதம்—சாதி—மூடப் பழக்க வழக்கங்களைக் கண்டித்து27 ஆண்டுகட்கு முன்பே எதிர்ப் புக்களுக் கஞ்சாமல் முதன்முதல் 'அஞ்சா தெழுந்திரும் ஆதி திராவிடரே'—'தூங்கினது போதும் கண்ணை விழி யப்பா'—'சுதந்தரக் கனி பழுத்திருக்குதாம்' என்ற இவை போன்ற பல பாடல்களின் மூலம் தாழ்த்தப் பட்ட பெருங் குடி மக்களைத் தட்டி யெழுப்பியத் தனிப்பெருமை நமது கவி ஞருக்குத்தான் உரியது. இந் நூல் தமிழ் மக்களுக்கு ஓர் அருமருந்தைப் போல நன்மை பயக்குமென்று நம்பு கிறேன். வாழ்க கவிஞர்! சூழ்க தமிழ்ச் சோலை!!

* * * *

திருவாட்டி வ. பா. தாமரைக்கண்ணி. சென்னை.

உணவுப் பஞ்சம், துணிப் பஞ்சம், விறகுப் பஞ்சம் என் னும் எத்தகைய பஞ்சங்கள் நம்மை அலைக்கழித்த போதிலும்,

கவிப் பஞ்சம் இன்னும் நம்மை அண்டாம லிருப்பதற்காக மகிழ்ச்சி யடைகிறோம்.

பண்டைய ரோம சாம்ராஜ்யம் தனக்கு ஈடும், எடுப்பும் இன்றி மகோன்னதமான நிலையிலிருந்த காலத்தில், ஓர் அறிஞர் திடீரென ஒரு நாள் காலையில் விழித்தெழுந்து, "ரோம சாம்ராஜ்யம் இன்னும் ஒரு நூற்றாண்டுக்குள் அழிந்துவிடும். காரணம்; அதில் கவி மரபு அற்றுவிட்டது. கவிகளைச் சுவைப்பாருமில்லை" என்று ஒரு துணிச்சலான செய்தியைச் சொன்னார். இதைக் கேட்டுஅக் கால ரோம வீரர்கள் நகைத்தார்கள்; அவர்மீது ராஜத் துவேஷ வழக்குத் தொடர்ந்து அவரைக் கொன்றார்கள்: அவர் மாண்டார். ஆனால், அவருடைய வாக்கு பலிக்கத்தான் செய்தது. ஒரு நூற்றாண்டுக்குள் ரோம சாம்ராஜ்யம் அடிப்படையோடு நிலைகுலைந்து வீழ்ந்தது.

மேற்படி அறிஞர் கூறிய இலக்கணம் இக் காலத்துள்ள வல்லரசுகளில் எதற்கேனும் பொருந்துமோ, என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால், நம் அருமைத் தமிழ் நாட்டுக்கு அது ஒருக்காலும் பொருந்தாது. தமிழ்க் கவி மரபு இதுகாறும் அற்றுப் போனதில்லை. தமிழ்ப் பாட்டுகளைச் சுவைப்பவர்களின் எண்ணிக்கையும் சுருங்கினதில்லை. வறுமையில் வாடியேனும் தமிழ்ப் புலவர்கள் கவிகளை—ஜீவகளையுள்ள கவிகளைத்தான் சொல்கிறேன்—பாடிக் குவித்திருக்கிறார்கள். ஓர் உண்மைக் கவி ஆயிரம் ஆண்டுகட்கு ஒரு முறைதான் அபூர்வமாகத் தோன்றுவார் என்று சொல்வார்கள். ஆனால், நமது நல் வினையைப் பாருங்கள்! ஒரே காலத்தில்—உதாரணமாக நமது தலைமுறையிலேயே—பல உண்மைக் கவிகளைப் பெற்றிருக்கும் பேறு நமக்குக் கிடைத்திருக்கிறது. அவர்களை வைத்துப் படைக்க நமக்கு வகை யிருக்கிறதா?

மகா மதுரகவி திருவாளர் வீ. வே. முருகேச பாகவதர் நம் கண்முன் உலாவும் அத்தகைய மேதைகளில் ஒருவராவார். அவர் கல்லாத கலை இல்லை யென்பது அவர் சொல்லாலேயே விளங்கிவிடும். அவர் ஒரு பெரும் பேச்சாளி; சீர்திருத்தக்காரர்; புரட்சி வீரர்; இசை வல்லுநர்; நாடகாசிரியர்;

சிறந்த நடிகர்; காலட்சேபம் செய்பவர்; இன்னும் என்ன வெல்லாமோ!

மகா மதுரகவி யவர்கள் இயற்றிய பாடல்களின் தொகுதியாகிய "தமிழ் சோலை, கவிதை மலர்" முதல் பாகத்தைக் கண்ணுறும் வாய்ப்பு அண்மையில் எனக்குக் கிடைத்தது. சோலையில் புகுந்தேன். என்னை மறந்தேன். கவிதை மயமாய் விட்டேன். மேலே சொல்ல எனக்கு ஒன்றும் தோன்றவில்லை உண்மைத் தமிழர் ஒவ்வொருவர் கையிலும், அடுக்களையிலும், அலமாரியிலும் இருக்க வேண்டிய நூல் என்று மட்டும் சொல்லத் தோன்றுகிறது. முருகேச பாகவதர் வாழ்க! இந் நூலை அச்சிடுவதற்குப் பொருளுதவி செய்த பம்பாய் பழந் தமிழ் மக்களுக்கு என் வாழ்த்து.

'விடுதலைக் கனி' நமது நாவில் தமிழ்ப் பழ ரஸத்தைச் சொட்டுகிறது. 'விடுதலைக்குயில் கூவுதே' என்னும் பாட்டைக் கேட்கும்போது, தமிழ்ச் சோலையில் மாங்கிளை யொன்றில் கண்ணுக்குத் தெரியாத குயில் ஒன்று கூவுவதைக் கேட்கும் உணர்ச்சியையே நாம் அடைகிறோம். 'விடுதலைத் தீ' நமது ரத்தத்தைக் கொதிப்பேறச் செய்கிறது. 'ஆலயமோ கொலைக் களமோ' என்னும் வரிகள் நமது செவிகளில் ஒலித்துக் கொண்டே யிருக்கிறது. "பல்லி விழுந்த பலன்" 'எம கண்டம்,' 'புதுமை' என்னும் கவிகளில் பாகவத ரவர்களின் நகைச் சுவைத் திறன் நன்கு வெளிப்படுகிறது. புலவர் கதையை நடத்தும் திறத்தினை 'பாகனும், பகுத்தறிவுப் பையனும்' என்னும் பாட்டு காட்டுகிறது. கவிஞர் அவலச் சுவையைச் சித்திரிப்பதில் கை தேர்ந்தவர் என்பதை, 'தொழிலாளர் துயரம்,' 'ஆதி திராவிடர் அக முருகல்' என்னும் பாட்டுக்கள் விளக்குகின்றன. புலவருடைய எல்லையற்ற கற்பனு சக்தி 'தாமரைப் பெண்'ணிலும் 'இசை' யிலும் புலனுகிறது, 'மஞ்சள் மகத்துவம்' நம்மைத் தூக்கி வாரிப் போட்டு விடுகிறது. பூவாரத்தைப் படிக்கும்போது நாம் சிரிக்காமல் வேறு என்ன செய்ய முடியும்? அந்த மட்டில், மற்றவர்களைப் போல் 'கீவாரம்' என்று அமைக்காமற் போனதற்காக நாம் கவிஞருக்கு நன்றி செலுத்த வேண்டும்.

S. M. ஞானப்பிரகாசம், B. A., B L., வழக்கறிஞர் சைதாப்பேட்டை

"ஒடுக்கப்பட்ட மக்கள்—பாட்டாளி மக்கள் முன்னேற்றத் திற்காகப் பல்லாண்டுகளாகப் பாடுபடும் அன்பர் மகா மதுர கவி முருகேச பாகவதரவர்கள் இயற்றிய "தமிழ்ச் சோலை" கவிதை மலரைப் பன்முறை படித்தேன். மூடப் பழக்க— வழக்கங்களிலே முன்னணி பெற்று வரும் மக்களின் செயலைக் கண்டித்து அவர் தம் நல் வாழ்க்கைக் கான அறிவியல்— பொருளியல்—சமூகவியல்—இவற்றை ஆழ்ந்த, அகன்ற, அரி யக் கருத்துக்களோடு பொருத்தமான சொற்களில், திருத்த மான நடையில், சுருக்கமாக-எனினும் விளக்கமாகக்-கூறும் இயல்புடையவர் நமது முருகேச பாகவதர் என்று "தமிழ்ச் சோலை" சொல்லுகிறது. இக் கவிதை மலர் தமிழனின் அன் றைய—இன்றைய வாழ் நிலையை எடுத்துக் காட்டுங் கண் ணாடி; மூட பழக்க வழக்க இருட்டிலே மூழ்ந்திருப்போ ருக்கு ஒரு மணி விளக்கு ........"

* * * *

**மணிலை** சிவமுத்து, தமிழாசிரியர்

"நம் தமிழ் நாட்டிலே தமிழரிடையே இருந்து தமிழர் நல் வாழ்வின் பொருட்டே தொண்டாற்றி வரும் இன்னிசைப் புலவர் மகா மதுர கவி முருகேச பாகவதர் மிக அழகாக பேசு தலில் வல்லவர் என்பது எனக்கு நெடு நாட்களுக்கு முன்னரே தெரிய வரும். ஆனால், உணர்ச்சி தோன்றப் பாடுவதில் வல்ல வர் என்பதை அவரால் இயற்றப் பெற்ற "தமிழ்ச் சோலை" என்னும் தொகுப்பின் முதன் மலரைக் கண்ணுற்ற பின்னரே நான் நன்குணர்ந்தேன். "எழுவாய் தோழா" "பயனிலை தோழா" "செயப்படு பொருள் தோழா" என்பன போன்ற தலைக் குறிப்புக்களைக் கண்டபோது, இவை பொழுது போக் குக்குகந்த விநோதப் பாடல்கள் போலும் என நான் எண் ணினேன். ஆனால் அவைகளைப் படித்துப் பார்க்கும்போது மக்களுக்கு உணர்ச்சியை மிகுவிக்கும் உயிருள்ள பாடல்க ளாக இருத்தல் அறிந்து பெரிதும் வியப்புற்றேன். இவ்விதமே "தீண்டாமையின் கொடுமை" "பெண்ணுரிமை" "குருட்டு" பழக்க வழக்கங்களின் தன்மை" முதலிய அரிய பொருள்கள்

அமைந்துள்ள பாடல்கள் யாவும் புத்தம் புதிய முறையிலே, மக்கள் உள்ளம் கவரும் வகையிலே அமைந்துள்ளன. முற் காலத் தமிழர்கள் வாழ்ந்த நிலையினையும், இக் காலத் தமிழர் களின் பிற்போக்கினையும் நமது பாவாணர் நினைந்து நினைந்து உள்ளம் உருகிப் பாடியுள்ளார். மகா மதுர கவி முருகேச பாகவதர் அவர்கட்கு என் உள்ளமார்ந்த வாழ்த்து உரிய தாகும்........"

*   *   *   *

மருத்துவ ஞாயிறு பண்டித S. S. ஆனந்தம்,

தென்னிந்திய மருத்துவ சங்கத் தலைவர், தியாகராயநகர்.

சிறந்த பேச்சாளரும், இன்னிசை யாளரும், தமிழ்க் கவி ஞருமாகிய மகா மதுர கவி வீ. வே. முருகேச பாகவதர் அவர்கள் தமிழகத்திற்குப் புதியவரல்ல. பல்லாண்டுகளாக தன்னுணர்வுக்கும், தமிழர்க்கும் சலியாமல் தொண்டு புரிந்து வரக்கூடியவர். பேச்சளவில் சீர்திருத்தம் பேசி உள்ளூர உளுத்துப்போன வைதிகத்துக் கடிமையாகக் கூடியவரல்ல. சொல்லிய வண்ணம் செயலிலும் பிறழாதவர். இவரால் எழுதப் பெற்ற 'தமிழ்ச் சோலை' என்ற கவிதை மலரை பார்வை யிட்டேன். இதன் பெயருக் கேற்ப ஒவ்வொரு பாக்களும் படிக்கப் படிக்க இன்பத் தேனூறுகிறது உள்ளத்தைக் கவரு கிறது. குறிப்பாக சுகாதாரப் பாடல்களின் கருத்திற்கிணங்க மக்கள் நடந்து வருவார்களாயின் அனைவரும் நோயணுகாமுன் காக்கும் அறிஞர்களாகலாம். எனவே! தமிழர்கள் கவிஞரின் மகா மதுர கவித்தேனை யருந்தி இன்புறுவார்களாக!

*   *   *   *

"ஜீவபந்து" T. S. ஸ்ரீபால்,

தென்னிந்திய ஜீவரட்சா பிரசாரக சபை தலைமை பிரசாரகர் சென்னை.

"............இந்நூலைத் திறந்ததும் 'எழுவாய் தோழா' என்ற தலைப்பிலுள்ள 'உலகமெலாம் போற்று திருக்குறளைப் பூமேல்' என்ற கவிதையை படிக்கும்போது உள்ளமெலாம் பூரிப்படைந் தேன். அந்த ஆரம்ப உயரிய வரிகள் இயற்கை கவிஞர் திரு முரு கேச பாகவதர் அவர்களின் சிறந்த அறிவின் சிகரத்தை எடுத்து காட்டும் ஓரளவு கோலாகும். ஆம்! நமது கலைகுறள்; நமது

வேதம் குறள்; நமது நாகரிகம் குறள்; நமது வாழ்க்கைக்கு அடிப்படை குறள்; என்பதை பல இடங்களில் நினைவுபடுத்துகிறார். 'ஆடியலங் கோல' மென்னும் அழகிய வெண்பா மூலம் ஆடி மாதத்தில் பெரிய பாளையத்தில் நிகழும் காட்டு மிராண்டி தனத்தை உள்ளம் உருகும் வகையில் அகக் கண்ணில் படம் பிடித்துக்காட்டி மக்களை நல்வழியில் திருப்ப பெரிதும் முயன்றிருக்கிறார்............"

வெல்க பகுத்தறிவு! வீழ்க மடமை!!

* * * *

திருவாட்டி T. S. குஞ்சிதம் குருசாமி, B A., L T,

"...........இக் கவிதை நூல் தோழர் மகா மதுர கவி முருகேசபாகவதர் அவர்களால் இனிய, எளிய சொற்களால் அமைக்கப் பெற்ற சுவைமிகுந்த பாடல்களைக் கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. இக்கவிஞரை சுமார் 16-ஆண்டுகளாகவே அறிவேன். தன்மான உணர்ச்சிப்பெற்ற பேச்சாளர், எழுத்தாளர், கவிஞருங்கூட! பல நூறு ஆண்டுகளாய் இந்துமதம் என்ற ஆரிய அடக்கு முறைக்கு உட்பட்டுக் கிடந்துழலும் நம் மக்கள் விழிப்படைய இந்நூல் உறுதுணையா யிருக்குமென்பதில் ஐயமில்லை. "சாதிமதப் பெருங்காட்டைத் தானெரித்துப் போட்டு....தன்மான உயர்விதையை ஊன்றி" என்ற கவிகள் மிகப் பொருத்தமாகவும், அழகாகவும் நவரத்தின மாலையைப் போலக் கோக்கப்பட் டிருக்கின்றன. விரிகின்ற தாமரையை அதிகாரத்தால் தடுத்து நிறுத்த முடியுமா?........அதைப்போல விடுதலைத் தீயையும் அணைக்க முடியாது, என்ற உவமை மனதில் சுரீலெனப் பதியக்கூடிய ஒன்று. "பல்லி விழுந்த பலன்" நகைச் சுவை பொருந்திய தென்றாலும், உண்மை செறிந்த தல்லவா?..........."காலை விழி" "சுக வழி" "கிளிக் கண்ணி" ஆகிய பாடல்கள் சிறுவர்க்கான பாடப் புத்தகங்களில் அவசியம் இடம்பெற வேண்டியவை..... ...."மங்கையர் முறையீடு" என்ற பாடலில் பெண்கள் ஆண்களைக் கேட்கவேண்டிய அத்தனை கேள்விகளையும் அடுக்காக, உருக்கமாகப் பொருத்தமாகக் கேட்டு விட்டார், தோழர் முருகேசனார்.

"துக்கமும் இரக்கமும் உதித்தது; அவ்வேளையும் (ரிக்ஷாக்காரன்) ஒரு கல்லாய் இருந்திடில் துதிப்பார்கள் சாமியாய்" என்ற சொற்களைப் படிக்கும்போது, நம்மை யறியாமலே, "சிரிப்பும், கண்ணீரும் கலந்த கோபம் பொங்குகிறது. "மதமெனும் பேய்பிடியாத" மானிடப்பற்று மட்டுமே கொண்டவர்கள்கூட கலைவளர்ச்சியில் பங்கு பெறுவர் என்பதற்கு இக்கவித் திரட்டு மற்றோர் எடுத்துக் காட்டு........"

*  *  *  *

**மு. அண்ணல் தங்கோ,** 'தமிழ் நிலம்' எழுத்தாளர் குடியேற்றம் வேலூர்

"என் அன்புக்கும், நன்றிக்கும் உரிய தோழர் சென்னை கொன்னூரெனும் பொன்னூரளித்த பன்னூலாசிரியர் தமிழ்மணி - பகுத்தறிவுப் புலவர் - இனிய நறுங்கவி திரு வீ. வே. முருகப்ப நாவலர் (மகா மதுர கவி முருகேச பாகவதர்) அவர்கள் நம் அருந்தமிழ் நிலத்தில் ஆக்கி வளர்த்தளித்த 'தமிழ்ச் சோலை'யில் நுழைந்துலாவி பல்சுவைக் கவிதைக் கனிகளை சுவைத்தின்புறும் நல்வாய்ப்பு கிடைத்தமைக்காக மகிழ்ச்சி யடைகிறேன். இந்நாட்டுக்குரியப் பழங்குடித் தமிழ் மக்களை இழிவுபடுத்தும் பாக்களையே இயற்றிவரும் சான்றோர், புலவர், தேசியக் கவிகள், வரக்கவிகள், தாசர்கள், தொண்டர்கள் முதலாய பலர் நிறைந்த நந்தமிழ் நாட்டிலே யார்செய்த தவத்தாலோ எவருடைய உள்ளம் உருகிய தாலோ இன்று இங்கொன்று அங்கொன்றெனச் சொல்லுமாறு இரண்டொரு புத்துணர்வு - பகுத்தறிவு - புரட்சி நெறி - உரிமையுளத் தமிழ்ப்பா உழவர்கள் தோன்றத் தொடங்கி யுள்ளனர். இவர்களில் திரு முருகப்ப நாவலர் அவர்கள் முதலில் வைத்தெண்ணத் தக்கவாறு இச்சோலையை அமைத்துள்ளார்கள். இவ்வுண்மையை சோலைக்குள் சென்று ஆங்கே அவர் தம் இயற்கையறிவாற் பழுத்து மணம் வீசும் பல் கனிகளை சுவைத்து பார்ப்பவர்கள் நன்குணர்வார்கள் என்பதில் ஐயமில்லை. இவ்வினிய பாக்கனி நூல் தமிழ் நிலத்தும், பிறவிடத்தும் உள்ளத் தமிழர்மனை தோறும் தோன்றித் தனித்தமிழ்ப் பற்றும் தனியுரிமைத் தமிழ் அரசும் தோன்றத் துணைபுரியுமென்று நம்புகின்றேன்........"

தி. மு. ஆறுமுகம், தலை யமைச்சர் செம்பியம் சர்க்கிள் உணவு கமிட்டி.

என் கெழுதகை நண்பரும், பன்னூலாசிரியரும், மகா மதுர கவியெனச் சிறப்பு பெயர் பெற்றவருமாகிய தோழர் வீ. வே. முருகேச பாகவதரவர்கள் தமிழகத்திற்கு அளித் துள்ள தனிப்பரிசாக விளங்குகிறது, "தமிழ்ச் சோலை." இதன்கண் பல அரும்பொருள்கள் செய்யுள் வடிவம் பெற்றுள் ளன. இனிய, எளிய, அழகிய செந்தமிழ்ப் பாமாலைகள் நிறைந்த இத்தனித் தமிழ்நூல் புதுமை யுள்ளம் படைத்துப் புதுயுகத்தைக் காண விரைந்து நிற்கும் தமிழர்க்கு உண்மையி லேயே உணர்ச்சியை யூட்டுவதாகும். தீண்டாமை, பெண் ணுரிமை, சமதர்மம், தொழிலாளர் முன்னேற்றம் முதலியவற் றைக் கிளந்து கூறும் முறையால் பாகவதர் அவர்கள் பெரிதும் வெற்றி பெற்றுள்ளார். "பல்லி விழுந்த பலன்," "எமகண்டம்" போன்ற தலைப்புடைய பாக்கள் நகைச்சுவை யூட்டுகின்றன. எனவே, எல்லா வகைகளிலும் இந்நூல் மூலமாகத் தமிழ் நாட் டிற்கும், தமிழருக்கும் பாகவதர் அவர்கள் சிறந்த தொண்டு செய்திருக்கிறார்; நல் வ ழி யு ங் காட்டியிருக்கின்றார் என்று துணிந்து கூறலாம். தமிழர் ஆதரவளிக்க வேண்டும்; தமிழ் நாடு முழுது மட்டுமல்ல; தமிழர் சென்று வசிக்கும் கடல் கடந்த நாடுகளிலும் "தமிழ்ச் சோலை" சென்று தமிழர் கரங் களில் திகழவேண்டும் என்பது என்னுடைய பெருவிருப்பம்.

* * * *

A. P. பார்த்தசாரதி, முன்னைய செம்பியம் பஞ்சாயத்துபோர்டு தலைவர்

இவ்வரிய "தமிழ்ச் சோலை"யை தமிழ் நாட்டுக்கு தந்துத விய திரு முருகேச பாகவதரவர்களை என் பொது வாழ்வில் பல ஆண்டுகளாக அறிவேன். இவர் ஓர் ஒப்பற்றக் கவிஞர். முக்கியமாக நம் மக்கள் வசிக்கும் நகரம், கிராமம் ஏன்? வெளி மாகாணங்களிலுஞ் சென்று சமூக உயர்வுக்காக பிரசார யந்தி ரம்போல் இன்றளவும் தளராமல் தொண்டாற்றி வருபவர். "சத்தியமே ஜெயம் அதைச் சார்ந்தவர்க் குண்டோ பயமே" என்று வெகு நாட்களுக்கு முன் வெளியிட்டுள்ள அவரின் கவிதைக் கொப்ப நடை முறையிலும் ஒழுகி வந்ததனாலேயே இன்று இத்துணை சிறப்புக்குரியவராய் விளங்குகிறார். அறிவுக்

கொள்வாததும், கவைக்குதவா ததுமானக் கதைகளைக் கூறி மக்களை மடமையிலாழ்த்தும் பாகவதரல்ல நமது பாகவதர்,.... ஒவ்வொரு பேச்சிலும், பாட்டிலும், காலட்சேபத்திலும் மிக எளிதாகப்பல ஆதாரங்களுடன் கேட்பவர் வியக்கும் வண்ணம் அறிவையும், சீர்திருத்தத்தையும் "இஞ்ஜெக்ஷன்" செய்து புத்துலகத்திற்கழைத்து செல்லும் புரட்சி வீரர். நம் மக்களும் பொதுவாக வாலிபர்களும் இன்றைக்கு ஓரளவு விழிப்பும், எழுச்சியும், வீரமும் நாட்டுப்பற்றும் கொண்டுள்ளார்கள் என்ருல், அது நமது கவிஞரின் மொழி இசை, எழுத்து இவற்றிலேயே என்று துணிந்து கூறலாம்..........."

* * * *

த. வே. முருகேசன், ஆசிரியர், கல்விச் சங்கம், சென்னை.

உலகத்தில் ஒவ்வொருவர் உள்ளத்திலும் உதிக்கும் எண்ணங்கள் பலவாகும்! அவை தம்மாலும் பிறராலும் ஏற்படலாம். என்ருலும், வஞ்சக சூழ்ச்சிக் கூட்டத்தினரால் இடைக்காலத்தில் முளைத்த உயர்வு தாழ்வு, நாட்டை அடிமைக் குழியில் வீழ்த்திவிட்டன என்று தெரிந்த பல தோழர்களும், அறிஞர்களும் அக்கொடுமையினின்று நாட்டை விடுவிக்க அரும்பாடுபட்டு வருகின்றனர். இவர்களில் குறிப்பாக பொதுநலப் பிரியரும், சமூகத் தலைவருமாகிய மகா மதுர கவி வீ. வே. முருகேச பாகவதர் அவர்கள் ஒருவராகும். இவர் தமிழ் மொழிப்பாவாயிலாக இயல், இசை, நாடக ரூபமாய் பகுத்தறிவு நூல்கள் பல இயற்றி யளித்துள்ளனர். இதுபோது "சொல்லுக சொல்லிற் பயனுடைய" என்றவாறு பொருட்பொலிவும், திட்பநுட்பமும் செறிந்து சிறக்க "தமிழ்ச் சோலை" கவிதை மலரை இயற்றி யளித்திருப்பதற்கு நான் நன்றி பாராட்டுவதுடன் இதை விருப்பு வெறுப்பு இன்றி உன்னி உன்னி உணர்ந்தால் உள்ளம் உருக்கொண்டெழும் என்று கூறினுல் மிகையாகாது. ஈண்டு அடிமைத் தளையை அறுத்தழித் தொழித்து அறிவொடுவாழ அன்பும், ஆர்வமுங்கொண்ட அன்பர்கள் ஆதரிக்க முன் வருவார்கள் என்று நம்புகிறேன்.

**வே. அண்ணுமலை சாமி, கவிஞரின் மாணவர்களி லொருவன்.**

எனைப்போன்ற மாணவரும் எளியபழந்
 தமிழர்களும் ஏற்றங் காண
பொனைப்போன்ற மொழியாலும் புரட்சிநிறை
 கவியாலும் பொருந்த சாற்றி
மினைப்போன்று விளக்கிடுவன் செவிமடுத்தார்
 மனந்திரும்ப மேலும் மேலும்
தனைப்போன்று பிறரைமிக நேசிக்குங்
 குணம் படைத்த தகைமை மிக்கான்

இங்கிதமாய்க் கவியெழுதித் தள்ளிவிட்டால்
 கடன்தீர்ந்த தென்றெண் ணுது
கங்குற்பக லோயாது பலஊர்க்குங்
 கால்கடுக்கக் கடுகி லேகி
சங்கம்பல பலநிறுவி புரட்சிக்கனல்
 வீசிடவே சாற்றி வீர
மங்களபே ரறிவுவிளக் கெரியவைத்தான்
 தமிழ் மக்கள் மனத்த கத்தே

கத்திநகர் தனில்வாழ்ந்த எல்லப்ப
 தாசனெனுங் கவிஞர் கோமான்
உத்தமரின் முதற்சீடன் கல்லாருங்
 கற்ருரு மூவக்கும் பூமான்
முத்தமிழின் தேன்சுவையைத் தானருந்தி
 மற்ரூேர்க்கும் முழுவன் மீபாடு
சித்தமுறத் தருங்குரவன் முருகேசன்
 இந்நூலும் சிறந்து வாழி.

சென்னை நகராண்மைக் கழக உறுப்பினரும், டில்லி அரசியல் நிர்ணய சபை அங்கத்தினருமாகிய சட்டாவதானி

**பூ. மு. வேலாயுதபாணி M. L. A. அவர்கள் யாத்த**

## சிறப்புப் பாயிரம்

**உலகுயிர் பரமா யோங்கிடு நிமல**
**னிலகிய வருளா லியங்குபு கறங்கு**

திரைகட லுடுஇய செப்பரு ஞாலத்
துரைபவ ரிடையில் ஓதரும் பன்மொழி
ஊன்று கோலன உயர்சார் மணியன
சான்று நிற்பன சதுரோர் மொழியாம்
தமிழ்ஹீப் ருகிரேக்கும் சமஸ்கிருத லத்தீன்
அமிழ்ந்தன நான்கும் அவைகளிற் றலையாய்
திலகம்போலத் திகழுந் தமிழ் மொழி
நிலத்தோர் போற்றும் நெறியுடைத் தான
கால்டுவெல் அத்தி யட்சர் பெருமான்
மேல்நாட் டுயர்ந்த வின்ஸ்லோ பாதிரி
சார்லஸ் கோவர் தகுவிற் பனர்கள்
சீர்மொழி ஒன்றென செப்பின தமிழ்மொழி
கம்பர் அவ்வைக் கவிகாள மேகம்
அம்புக ழேந்தி யணியொட்ட கூத்தன்
தெள்ளிய குறள்நவில் திருவள் ளுவரும்
குள்ள வடிவன் கோனகத் தியனும்
நற்கீ ரன்பல நற்சங் கத்தோர்
பொற்கிழி யன்ன போதருந் தமிழ்மொழி
பத்துப் பாட்டும் பகரெட்டுத் தொகை
கத்தும் பஞ்ச காவியமுடனே
தொல்காப் பியமுதற் றோன்றிய விலக்கணம்
நல்பதி னெண்கீழ் கணக்கெலாம் நாடி
சிறப்புற வந்தத் திருமிகு தமிழ்மொழி
இறப்பினை யகற்றும் இணையிலா தமிழ்மொழி.
இந்த மொழியால் இசையுடன் சோலை
தந்து தீஞ்சுவை தண்ணீ ரோட
விடுதலைக் குயிலும் விடுதலைக் கூவ
விடுதலைக் கனியும் விடுதலைத் தீயும்
கடவுளைக் காணுங் கவினுறு தலமுந்
திடமுறு ஆதி திராவிடர் பண்பும்
ஆடி மாதத் தலங்கோ லமெலாம்
ஓடி ஒளிந்திட உண்மைத் தியாகி
இன்னும் பலபல எழிற்பூஞ் செடிகள்
மன்னிட வைத்தான், வாழ்கநந் தமிழர்;

வைத்தவ ஞரோ வரைகுதுங் கேண்மோ
மெத்தப் புலவர் மேவிடுஞ் சென்னை
கொன்னூர் பதிநற் குணத்தவர் மெச்சிடும்
பொன்னூர் மொழியன் புண்ணிய நுறவோன்
வேலா யுதவேள் விரும்பிய மனையாள்
சீலம் மிளிருந் தெய்வ யானை
அம்மை நோன்பு அவனியி லோங்க
செம்மை பெற்ற திறன்மிகு சேயன்
அகத்திய மரபு வணிபெற வந்து
சகத்தினி னூறவ தானம் செய்த
மகானூ னபாநு மாசிலா மணியென
சிகாரம் பம்புரி செல்வனெந் தந்தை
பூமுத்து வீரப் புகழ்நா வலன்பாற்
பாமுத்து நன்னூற் பருகிய பக்தன்
வாகடங் கண்ட வயித்தியக் குரவன்
பூகட மிமிரும் பொழிற்சுலா மெண்ணூர்
வாசகண் மணியன் வாணஎல் லப்ப
தாசப் புநிதன் றன்முதற் சீடன்
விழியிமைப் பதுபோல் விரைவினில் நாற்கவி
பொழிவான் மழையாய்ப் புதுமைகள் வழிய
பொன்னே ரிப்பதி புகழ்ந்திட அரசியல்
தன்னே ரிலாமற் றலைசிறந் திடவும்
மாணவர் உணவின் மன்றமு நிறுவிக்
காணவுங் கல்விக் கழகமுண் டாக்கி
என்சமு கத்தார் இன்புடன் வாழ
என்னுட னுழைத்த என்னருஞ் சோதரன்
பொதுசவை யெங்கும் போந்துயிர் புரக்கும்
மதுரித வாக்யன் மகாமது ரக்கவி
பட்டம் "விக் டோரியா பப்ளிக் ஆலில்"
கொட்டு முழக்கொடு கொடுக்கவும் பெற்றவன்
அகமகிழ் வடைய அரும்பிர சங்க
சுகஞ்சொரி மேகந் தூய்நிலை யன்பன்
முருகே சபாகவ தன்சீர்
திருநிறை யாயுட் செறிந்துவா ழியவே!

[கவிதை மலர் - 1]

# தமிழ்ச் சோலை

## எழுவாய் தோழா!

உலகமெலாம் போற்றுதிருக் குறளைப் பூமேல்
ஓதுவித்த வள்ளுவர்தம் மரபில் வந்த
நிலவுபழந் தமிழரைத்தீண் டாதா ராக்கி
நீதியற்ற தாங்கள்சுக வாழ்வில் வாழப்
பலவழியி லாள்பலத்தாற் றேளு ரத்தால்
பழித்தொடுக்கி வைத்தவர்கள் பார்த்து நாண
இலகுசம உரிமைதனை அடைய என்றும்
இன்றைக்கே சிங்கமென எழுவாய் தோழா!

பாமரரை யேய்த்தழிக்கும் நஞ்சைப் போன்றப்
பாதகர்கள் சுயநலத்தால் மக்கட் குள்ளே
தீமைதருந் தீண்டாமை புகுத்தி விட்டார்!
தேள்அரவம் மின்சாரம் திராவ கந்தீ
பூமிதனி லிவையன்றித் "தீண்டா மை"தான்
புத்தியுள்ள மாந்தரெவர் காணக் கூடும்?
ஏமாந்த திதுவரைக்கும் போதும்! போதும்!
இன்றைக்கே சிங்கமென எழுவாய் தோழா!!

உடம்பெலும்பு முறிந்திடவே செந்நீர் வேர்வை
உதிரப்பல் பாடுபட்டும் வயிற்றுக் கின்றிக்
கடல்கடந்துங் கூலிகளாய் வறுமை நோயால்
காண்தெருவின் மருங்கிலுறை புழுவைப் போன்று
துடிப்பவர்கண் ணீர்துடைக்க எதையுந் தியாகம்
செய்துபழம் பெருமைதனை நிலைநி றுத்த
இடிமுழக்கம் புரிந்துபெரும் வெற்றி காண
இன்றைக்கே சிங்கமென எழுவாய் தோழா!!!

# பயனில்லே தோழா!

எண்டிக்கும் பலநாடும் எல்லோரும் போற்றிக்
கொண்டாடும் வள்ளுவரை அவ்வையையும் மறந்து
ஒண்டவந்த வடநாட்டார் வகுத்தபலத் தொன்மை
பண்டிகையின் மூடபழ வழக்கங்க ளான
பழக்கங்கள் பலவற்றால் பயனில்லையே தோழா!

தங்கத்துக் கொப்பாகும் தன்மான மேன்மை.
சங்கையின்றி வேண்டும் புரட்சிமனப் பான்மை.
இங்குகொடுந் தீண்டாமை இழிந்ததனி உரிமை,
பங்கமுறும் அறியாமை பாழ்வறுமை தவிர்க்கப்,
பாதையமைக் காவிடிலோர் பயனில்லையே தோழா!

ரெட்டைமலை சீனிவாசன் ஆயபெருஞ் சிங்கம்
விட்டபல குறைகளையும் நிறைவாக்க எங்கும்
கட்டாயம் ஊரூராய்க் கழகங்கள அமைப்போம்.
பட்டதெல்லாம் இனிபோதும் பகைவர்களை நம்பி;
பழம்பெருமை பேசுவதால் பயனில்லையே தோழா!

தடந்தோளைத் தட்டிடுவோம்; சமத்துவமே காண்போம்
நடமாடி இனியொருநாள் நாய்வாழ்வு வாழோம்!
திடமான சிங்கம்போல் சிறந்தினிதாய் வாழ்வோம்!
படர்சாதிச் சமயமெனும் பாம்புதலை நொறுக்கப்
பயமினியுங் கொள்ளுவதால் பயனில்லையே தோழா!

## செயப்படு பொருள் தோழா!

இளங்கைம்பெண் திருமணத்திற் கிசைவ ளாயின்
இன்பமுறச் செயல்வேண்டும்; உயிரை யோம்ப
வளமளிக்கும் நீர், காற்று, உணவு போன்று
மாற்றுனை ஒழித்திடவே மானம் வேண்டும்;
களபகுளிர் சேற்றினிலே இனிது வாழ்ந்த
கனஆதித் தமிழர்வழி வந்த நாமே
உளம் வருந்த சேற்றில்புழு வாய்த்து டிப்ப
தொழித்தல்செயப் படுபொருளே உணர்வாய் தோழா!

மக்களுண்டி மக்கள்பறித் துண் ணும் நோக்கால்
மலைபோன்று குவித்துவைக்கும் மானம் அற்றக்
குக்கல்செய வினையாழ்ந்த குழியில் தள்ளிக்
கொடியபஞ்சப் பிணியதனைக் கொல்லல் வேண்டும்;
ஒக்கதிரு மணம்இறுதிச் சடங்கு யாவும்
உயர்தமிழர் முறையினிலே நிகழ்த்தல் வேண்டும்;
அக்கிரம ஆரியர்சொல் மனுவின் சட்டம்
அழித்தல்செயப் படுபொருளே அறிவாய் தோழா!!

நமதரிய நாட்டுபழம் பெருமை தன்னை
நல்லுயிரைத் தந்தேனும் மீட்க வேண்டும்;
சமதருமம் ஆற்றலுடன் ஐக்யம் வீரம்
சாருண்மை காதலுயர் ஒழுக்கம் நீதி
அமைந்தபல கவிதை கதை தீட்டித் தீட்டி
அர்த்தமிலாப் பொய்க்கதையை அழித்தல் வேண்டும்;
கமழும்திருக் குறள்படித்தே இயற்கை வாழ்வில்
களித்தல்செயப் படுபொருளே காண்பாய் தோழா!!!

# விடுதலைக் குயில்.

பரசு — பல்லவி — ஆதி

விடுதலைக் குயில் கூவுதே
விமரிசையான இன்பத் தமிழர் பூஞ்சோலையிலே (வி)

அநுபல்லவி

மடமைசாதி மதத்தை மண்ணிற்புதைத் தழிக்க
மக்களெலாம் ஓரினமாய் துக்கமின்றியே தழைக்க (வி)

சரணங்கள்

கொழுத்த முதலாளிகள் கொடுமை யெல்லாம் மடிய
உழைக்கும் தொழிலாளர்கள் உண்மை பயனடைய
உதவாத—சுய—நலபேத
ஊழல்களெல்லாம் ஒழிக்க ஏழைமக்கள் கண்விழிக்க (வி)

பொய்வேதப் புராணமந்த்ரப் புரட்டுகளும் மறைய
மெய்யறந் தூய்மைவாய்மை மேட்டிமையும் நிறைய
மேதினியில்—இந்தப்—போதினிலே
மிக்ககல்வி கைத்தொழிலில் தக்கபடி யேசிறக்க (வி)

முன்வினை சகுனம்விதி மூடப்பழக்கம் போகத்
தன்மதிப்போங்கி மக்கள் சரிநிகர் சமமாகத்
தகையோங்க—உள்ளப்—பகை நீங்கத்
தைரியமே மிகுக்கச் சௌரியமே வகுக்க (வி)

இறந்தோர்க்கும் சாமிகட்கும் இயற்றும் செலவனைத்தும்
சிறந்தமக்களின் கல்வி செய்தொழி லுணவிற்கும்
செலுத்திடவே—மிக—வலுத்திடவே
செறியும் பகுத்தறிவே அறிந்து சுகித்திடவே (வி)

வறுமை பிணியொழிய வர்ணாச்சிரமம் அழிய
மறுமை சொர்க்கம்நரக மனப்பான்மையுங் கழிய
மாமதுரக்—கவி—பூமகிழ
வருங் கொன்னூருறைநீத அருமுருகேசன் கீத (வி)

## விடுதலைக் கனி.

சாதிமதப் பெருங்காட்டைத் தானெரித்துப் போட்டுத்
தனிநலமாம் மேடழித்துச் சமத்வநிலங் கண்டு
ஓதரிய தன்மான உயர்விதையை யூன்றி
உறுதியெனும் எருவிட்டே உணர்வுபுனற் பாய்ச்சி
ஆதரவாய்ப் பகுத்தறிவாம் அடர்வேலி நாட்டி
அச்சமெனும் புள்ளோட்டி ஆருயிர்போல் வளர்த்த
ஏதமிலாத் 'தமிழ்ச்சோலை' தனிற்பூத்துப் பழுத்த
இனியவிடு தலைக்கனியை யெடுத்துண்ண வாரீர்!

## விடுதலைத் தீ.

விரிகின்ற தாமரையைத் தோகை தூக்கி
விரித்தாடும் மாமயிலைப் பறக்கும் புள்ளைப்
பரிதிவரும் முனம்கூவும் சேவல் தன்னைப்
பாரிலெந்தச் சட்டம் அதி காரத்தாலும்
அரிதன்றோ தடுத்திடுதல்? அவனி மீது
அங்ஙனமே ஆர்வமிக்கா ரகமே பற்றி
எரிகின்ற விடுதலைத் தீ தனையணைக்க
எவராலும் இயலாது! இயலா தம்மா!!

# தியாகி.

அச்சமெனும் ஒருவார்த்தை தேடிப் பார்க்கின்
அவனகரா தியிற்கிடைப்ப தரிதே யன்றோ!
மெச்சும்லட்சி யக்கொடியைச் செங்நீ ராலே
மேன்மேலும் தோய்த்திடுவான்; மக்கள் வர்க்க
சச்சரவைப் பசிநோயை இழிவைக் காட்டும்
தனிநலத்தை மவுடிகத்தைத் தான ழிக்க
இச்சகத்தில் தனதரிய உயிரும் ஈவான்;
எவனென்றால் இவன்றனே தியாகி யாவான்!

சதிகாரர் அவன்வீட்டைப் பெருநி லத்தைச்
சார்ந்தபொரு ளத்தனையுங் கவர்ந்திட் டாலும்
மதிகாணச் சீர்திருத்தம் மறும லர்ச்சி
வாலிபர்க்குள் தனிப்புரட்சி சமத ருமப்
பதிமேவு பிரசாரத் தொண்ட வன்றன்
பகரரிய உழைப்பையெலாம் மறந்து தீயோர்
இதமின்றி துரோகமிட எண்ணிட் டாலும்
இலட்சியத்திற் பிறழா தான் தியாகி யாவான்!!

## வீர திராவிடன்.

பிலகரி பல்லவி ஆதி

வீர திராவிடனே! இதை அறிவாய்!
வீர திராவிடனே! (வீ)

சரணங்கள்

ஆரிய சாதிமத ஆபாசக் காட்டை
நேரிலழித் தமைப்போம் தனித்தமிழ் நாட்டை (வீ)

பாட்டாளி வயிறார உண்ணவும் வேண்டும்
நாட்டினில் பெண்மக்கள் நலங்காக்க வேண்டும் (வீ)

தீண்டாமை என்பதுதான் தீயதோர் சாபம்
வேண்டாம் நமக்குள் இது மிகமிகப் பாவம் (வீ)

பொதுநலம் உயிரெனப் போற்றுதல் நன்று
மதுரகவிஞன் முருகேசன் பண் போன்று (வீ)

## இளைஞன்.

நானுமொரு இளைஞனேயென் றந்த நாளில்
நவின்றநெப்போ லியன்வீர உரையை ஓர்ந்து
ஞானமுயி ரினுமினிய வொழுக்கம் ஆற்றல்
நல்லுடம்பு உள்ளவளம் உறுதி வாய்மை
தேனீயைச் சிற்றெறும்பைப் போலு ழைப்பும்
சிறுஅணில்போல் சுறுசுறுப்பும் பரந்த நோக்கும்
வானிடிந்து வீழினும்அஞ் சாதப் பண்பும்
வயிரநெஞ்சும் வேண்டும்வா லிபரென் போர்க்கே!

# திராவிடம்

சாமா பல்லவி ஆதி

என்னரும் திராவிடமே - கண்ணனைய (எ)

அநுபல்லவி

உன்னரும் வாழ்வுக்கு ஓயாமலு ழைப்பேன்
உயிரைத் தந்தேனும் உனை தனி காண்பேன் (எ)

சரணம்

பண்டைய நின்தனி வீரம் வைராக்யம்
பண்பறிவாற்றல் ஞானம் மானம் ஈதெல்லாம்
இன்றைய அன்னிய கொள்கையினலே
இழிநிலையாச்சே - செழிப்பெலாம் போச்சே (எ)

இமயமலே முடி மீதினி லொருநாள்
இணையிலா வில்புலிமீன் மூன்றுந் திகழ
அமைந்த மூவேந்தர் கொடியினை நாட்டி
அரும்வெற்றியு வந்த - முருகேசன் சந்த (எ)

# இலட்சிய வீரன்.

நெஞ்சாண்மை யில்லாத கோழையவன்
இறக்கின்ருன், நித்த நித்தம்.
அஞ்சாத வீரமகன் ஒருமுறைதான்
இறக்கின்ருன், உடல்தான் வீழும்;
எஞ்சாத புகழுடம்பு அழியாது,
இலட்சியத்திற் கிறப்பானுயின்!
என்ஞான்றும் இவன்பெயரே பொன்னெ ழுத்தால்
சரித்திரத்தில் இலங்குந் தானே!

# செந்தமிழ் நாடு.

[கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற இசை]

பல்லவி

செந்தமிழ் நாட்டின் செல்வம் கரியாய்த்
தீய்ந்து போகுதே மனம் ஆய்ந்து வேகுதே - நம் (செ)

சரணம்

சந்துசந்தா யெங்கும் கோயிலுண்டாச்சு
ஜப்பான் கற்பூரம் எரிந்திடலாச்சு
முந்திசீன வெடி வெடித்திட லாச்சு
மோகம் ஆனதே! விவேகம் போனதே! - நம் (செ)

வேலையில்லாத தொல்லையினாலே
வெம்பசியால் மக்கள் மடிகிறார் மேலே
ஆலய உற்சவத்தால் இந்தக் காலே
ஆயிரங் கோடி வீணாய் அழியுதே ஓடி! - நம் (செ)

காண சகித்திடாக் 'கண்றாவி' பதுமை!
காணுதே கோயில் கோபுரப் பதுமை!
ஆணவக் கூட்டத்தினால் வந்த தீமை!
அழிவுநேர்ந்ததே! தமிழர்க் கிழிவுநேர்ந்ததே! - நம் (செ)

பிள்ளைப்பெறாச் சாமிக்குப் பெண்டாட்டி எதற்கு?
பள்ளியறை அரச போகங்க ளெதற்கு?
கள்ளச்சிறு இனத்தார் பிழைத்திடத் தானுக்கு
கண்களில்லையா? உண்மை கண்டு கொள்ளய்யா - நம் (செ)

பட்டாடை நவமணி நகைகளு மெதற்கு?
பசியில்லா பொம்மைக்குப் பால்பழ மெதற்கு?
'முட்டாள்' தனமிதுவே முதன்மையா யிருக்கு!
மோசம் தானையா! வெளி வேஷம் தானையா! - நம் (செ)

கோயிற்பொது சொத்துக்களைக் கூசாமலெடுத்து
குடிக்கக் கஞ்சியின்றித் தெருக்களில் கிடக்கும்
வாயில்லா மக்களின் தேவைக்கே அளித்தால்
வையம்புகழுமே! சத்தியதெய்வம் மகிழுமே! - நம் (செ)

தேகஆலயம் திகழும்நல் அறிவாம்
தேவதைக் கன்பினுல் அர்ச்சனை புரிவாம்
பாகவதன் முருகேசன் அருஞ்சொல்
பார்த்துவாழுவோம் அறிவுசேர்த்து வாழுவோம்-நம் (செ)

## அறிவுக்குத்தான் பஞ்சம்!

பஞ்சம்அந்தோ! பஞ்சமது வங்கப் பஞ்சம்!!
படித்திடவும், நினைத்திடவும், கேட்கக் கேட்க!
நெஞ்சமிகத் துடிக்கவைக்கும் கொடியப் பஞ்சம்!
நேரில்பல லட்சமக்க ளுயிர்ப றித்த,
பஞ்சநிலை யருகிருக்க வயிரத் தாலே
பத்துலட்சம் செலவழித்து முடிய மைத்து
வஞ்சமலைப் பெருமாளுக் கணிந்தா ரென்றுல்,
மனிதன்பகுத் தறிவினுக்கே பஞ்சம்! பஞ்சம்!!

# அழிவதோ தமிழா?

பொன்னைத்தான் செம்பைத்தான் கல்லைத்தான்
கடவுளெனப் போற்று கின்றாய்!
என்னத்தான் கற்றாய்தான் நம்முன்னோர்
இப்படித்தான் இருந்தா ராவென்
றுன்னைத்தான் கேட்கத்தான் உரைக்கத்தான்
எனக்குந்தான் உரிமை யுண்டு!
தன்னைத்தான் அறிந்தேதான் இயற்கையறி
வினில்வாழ்ந்தார் தமிழர் தானே!

நகத்தில்தான் தூசுத்தான் அணுகத்தான்
காணாத நரிம னத்தர்
செகத்தில்தான் கொழுக்கத்தான் நீமாடா
யுழைக்கத்தான் செய்தா யன்றி
இகத்தில்தான் என்னத்தான் உயர்ந்தாய் நீ
சொல்லத்தான் இயலு மோதான்?
அகத்தில்தான் கருதித்தான் பாராமல்
தமிழாநீ அழிய லாமோ?

# இதுவோ பக்தி ?

ஒருநாள் காலை ஒன்பது மணிக்கு
வருகிறேன், சென்னைபூக் கடைவழி நடந்து.
அருகிலோர் மெலிந்த ஆள் ரத்த வேர்வை
பெருகிவ ழிந்திடப் பிடித்தொரு 'ரிக்ஷா'
வண்டியை யிழுத்து வந்திடப் பார்த்தேன்,
கொண்டே நின்றான், கந்தர்கோ யில்முன்.
வெள்ளைவி பூதிதாள் மேனியிற் றுலங்கிட
உள்ளிருந் திறங்கினன், உடல்பருத் திட்ட ஆள்.
வாட்டமும் சோகமாய் வண்டிகா ரன்கரம்
நீட்டிக் கூ லிப்பெற நின்றனன், பணிவுடன்.
கொடுத்த தோர் கூலியில் குறைந்தது, ஓரணா.
அடுத்துமே கேட்டனன், அவ்வண்டி காரனும்,
'போட்டுக்கொ டுத்திடும் போகணும் தூர நான்;
மாட்டைப்போ லிழுத்தேனே மனங்கல்லோ உனக்கய்யா'
என்றதும், எதிரிக்கு இருவிழி சிவந்தன!
கன்றின்மேல் பாயுமோர் காளையைப் போன்றவன்
தள்ளியே அறைந்தான், தடியன், அவ் வேழையை.
உள்ளமே பதறியே ஓடியக் குண்டனை
எட்டியி ழுத்துநான் விட்டதும், ஏனென்றான்?
'மட்டிதன' மாகுமம் மனிதனை அடித்தது
எனப் புகன் றேனெனை எதிர்த்துமே நின்றவன்
கனல் விழி கக்கிட கடுமொழி வீசினன்.
காட்டினேன், எடுத்தவன் கனமிலா செயலினை.
வாட்டமாய் வெட்கியே வந்ததும் எதிரினில்
என் முகந் தனையவன் ஏறிட்டுப் பார்த்துமே
மன்னிக்கக் கோரியே மணிக்கரந் தழுவிபின்,
கவலையாய்க் கோயிலின் கதவண்டை நெருங்கினன்.

அவனறி யாமலே அணுகினேன், நானும்பின்.
அந்தவோர் ஏழையை அடித்ததன் கரங்களால்.
வந்தமட் டும்அவன் வாய்மூடி தாடையில்
அறைந்துமே கொண்டனன்; அடியுறும் பனேயென
தறையினில் வீழ்ந்துமே தன்னெதிர் நின்றிடும்
கல்லுரு வந்தனைக் கண்மூடி தொழுதனன்:
சொல்லநா வெழவிலே; துக்கமு மிரக்கமும்
உதித்த 'தவ் வேழையும் ஒருகல்லாய் இருந்திடில்,
துதிப்பர்கள் சாமியாய், சுயவறி வற்றவர்!
எனப்பல எண்ணங்கள் எழுந்தது அலேயெனக்!
கனமிலாக் காட்சியைக் காணவும் நாணியே
அகன்றதென் விழிகளும் அவ்விடம் விட்டுப் பின்
நகர்ந்ததென் உடம்புமேல் நடந்தது கால்களே!

## கடவுளேக் காணும் இடம்!

வண்டியிழுப் பவன்உடம்பின் வேர்வை நீரில்!
வயலினில்மா டாயுழைப்போன் பார்வை தன்னில்!
நொண்டிமுட வன்குருடன் பிச்சை ஏற்போன்!
நோயாளி ஊமையவன் முகத்தி லும்! நீர்
மொண்டேற்றம் இறைப்பவன்றன் களேப்பு தன்னில்!
மூட்டைசுமந் தேகுமவன் மூச்சு தன்னில்!
கண்டுமலேக் கல்லுடைப்போன் சோகந் தன்னில்
காண்பதெனிற் கடவுளேயுங் காணலாமே!

# தமிழன்—அன்றும், இன்றும்!

அடாணா ரூபகம்

ஆழாழி கடந்து மேனாட்டில் வாணிபம்
ஆண்மையாய் செய்தான்-பண்டைத் தமிழன்
பாழாகிக் கோழையாய் எதற்கும் பிற நாட்டைப்
பார்த்திருக்கின்றான்-இன்றைத் தமிழன்!

ஆனைக்கும் அஞ்சாது வீர வாளேந்தி
அருஞ்சமர் கண்டான்-பண்டைத் தமிழன்
பூனைக் குறுக்கிட்டால் கெட்ட சகுனம் என்று
புத்தி யிழந்தான்-இன்றைத் தமிழன்!

அஞ்சாமலெதற்கும் அறிவைத்துணை கொண்டு
ஆனந்தமாய் வாழ்ந்தான்-பண்டைத் தமிழன்
'பஞ்சாங்கம்' 'எமகண்டம்' 'வினை விதி' இவற்றால்
பஞ்சையாய்ப் போனான்-இன்றைத் தமிழன்!

சோதிமணி முடி திகழ நாட்டை ஆண்டு
சிறப்புற் றிருந்தான்-பண்டைத் தமிழன்
வீதியோரம் வெய்யில் மழை பனியால் புழுவாய்
விழுந் திறக்கின்றான்-இன்றைத் தமிழன்!

ஒப்பிலாத அரும் இயற்கையைத் தெய்வமாய்
உள்ள முவந்தான்-பண்டைத் தமிழன்
முப்பத்து முக்கோடி தேவரைக் காப்பாற்றி
முழுமோசம் போனான்-இன்றைத் தமிழன்!

உத்தமப் பெற்றோர்கள் உயிர் வாழும்போது
உணவீந்து காத்தான்-பண்டைத் தமிழன்
செத்தபின்பு பார்ப்பான் காலில் வீழ்ந்து மூட
சிராத்தம் செய்கின்றான்-இன்றைத் தமிழன் !

காதல் மணங்கண்டு மனமொத்த வாழ்க்கையில்
களிப்புடன் வாழ்ந்தான்-பண்டைத் தமிழன்
தீதுறும் வைதிக மூடமணஞ் செய்து
சீரழிகின்றான்-இன்றைத் தமிழன் !

மக்களுயிர் வாழ உணவாடை வீடு
மகிழ்ந்துதவினன்-பண்டைத் தமிழன்
அக்கரையாய் கோயிற் கட்டி கல்லுக்குப் பால்
அபிஷேகம் செய்கின்றான்-இன்றைத் தமிழன் !

பொதுநல நோக்கமும் சமதர்மப் பண்பும்
பொருந்திட வாழ்ந்தான்-பண்டைத் தமிழன்
மதுரகவி முருகேசன் தமிழ் போன்று
மனம்மாற வேண்டும்-இன்றைத் தமிழன் !

# பணம்.

**பீம்பிளாஸ்** பல்லவி **ஆதி**

பணமே படைத்தும் குணம் படையார்
பழியே பெறுவாரே - பாரே! (ப)

அநுபல்லவி

பணம் பிணமானால் கூடவராதே!
பகுத்தறிந்தே பிறர்க்குதவுதல் சீரே! (ப)

சரணம்

அங்கவீனர்க்கும் அருங்கல்வி தனக்கும்
அறிவு வளர்ச்சி சவைக்கும்
எங்கும் நிறைந்த ஏழையர் பசிக்கும்
இல்லம் இல்லாதவர்க்கும்-அளிக்க (ப)

என்புமுரிய உயிர் ஊசலாட
இரத்த வேர்வை சிந்த
முன்வண்டி இழுத்து வயல்மாடாய் துடிப்போர்
முழு உழைப்பால் கொழுத்த-கொழுத்த (ப)

தாயின் வயிற்றில் பிறக்கும் போது
தான்கொண்டு வந்ததேது!
காயம் விழுமுன் அறஞ்செயல் தோது
கவி முருகேசன் சொல்லும்-சொல்லும் (ப)

## * ஆடு அலங்கோலம்.

ஈரவுடை தாங்கி யிளமாதர் மண்படியக்
கோரமுடன் வீழ்ந்தெழுந்து கோரிமிகப்—பாரில்
உருளுவதைக் காணநம துள்ளந் துடிக்கும்;
மிருக செயலிதனின் மேல்!

மங்கையரும் ஆடவரும் மாவேப்பிலையணிந்து
அங்கமெலாந் தான்தெரிய ஆடிபுகழ்—தங்கியுண்டு
தொல்லைதரும் வாந்திகழி தொத்துநோய் வந்துடலம்
அல்லல் படுவ தறி!

உள்ளொளியாய் நின்றதொரு ஓரறிவித் தீச்செயல்கண்
டெள்ளி நகையாடி யேங்கிக்கொடுங்—கள்ளு புலால்
தானருந்த நீ பெரிய பாளையத்தைச் சார்ந் தோடிப்
போனதுமாப் புண்ணியமோ புகல்?

ஆலயமோ கொல்களமோ அம்மம்ம! என்றலறக்
கோலம்வந்து ஆடு கோழி கொன்றுதினல்—சீலதமிழ்
நாட்டார் முறையாமோ? நல்லறிவைத் தானிழந்தக்
காட்டுமி ராண்டித்தனங் காண்!

ஞானபுத்தர் ராமலிங்கர் நல்லவ்வை வள்ளுவனார்
தானுதித்த நாட்டினிலே தர்மமதை—தேனழிக்கும்
வண்ணம் அழிக்கவெறும் வாய்வேதாந் தங்கற்றுக்
கண்குருட னாய் கழறு?

* இப் பாடல்களில் குறிப்பிட்டுள்ள அறிவுக்கொவ்வா நிகழ்ச்சிகள் நடைபெறும் இடம், சென்னைக் கடுத்த பெரியபாளையம் என்னும் ஊர்.

இத்தகைய தீச்செயலார் எப்படித்தான் நாடாள்வர்!
பித்தர்களைப் பாருமெனப் பேசிடவே—நத்திப்
புகைப்படங்கள் தாமெடுத்துப் போகின்றார் அந்தோ !
வகைகெட்டுச் செல்கிறதே மாண்!

ஆரியர்கள் தாம்வாழத் திராவிடரா லாலயங்கள்
தாரணியில் தானமைத்த தன்மைபோல்—காரியமாய்ப்
பூசாரிவாழப் புலைக்கோயில் கட்டி வைத்தார்
ஆசார மாமோ அறி!

இதுதானோ உன்கல்வி! ஈதாமோ பக்தி!
இதுதானோ தண்டமிழ ரேண்மை!—இதுதானோ
அன்புடைய ஆண்டவனை அண்ட இதுவழியோ
துன்ப குணத்தானே சொல்?

## பல்லி விழுந்த பலன்!

என்னூரில் ஒருகிழவர் வயது எண்ப
திருக்குமவர் எனைத்தேடி வந்தா ரோர்நாள் !
முன்நின்றார்! 'என்ஐயா?' என்றேன், வந்த
முழுவிவரம் உரைத்திட்டார், பல்லி ஒன்று
தன்னிடது தோளின்மேல் வீழ்ந்த தென்று!
தயங்கினேன்பஞ் சாங்கம்தந்து பார்க்கச் சொன்னார்!
என்சொல்வேன் ! பலன்பெண்சம் போக மென்றேன்
"எனக்கா? தூ ! தூ ! பொய்"யென் றேகி னரே!

## எமகண்டம்!

ஆசியா ஆப்ரிக்கா அமெரிக்கா - இன்னும்
ஐரோப்பா ஆஸ்ட்ரேலி யா வெனவே
காசினியை ஐந்து கண்டங்களாய் - கண்ணால்
காணப் பிரித்தார் அறிஞர்களும்

ஆறுவது கண்டம் எமகண்டம் - இந்த
அகிலத்தில் இல்லாத தனிக் கண்டம்
ஆரியரும் அவர்தாசர்களும் - இதை
அறிவார்கள் தமிழர்கள் அறியாரே!

அந்தந்தக் கண்டங்களுக்குச் செல்ல - தனி
ஆகாயவிமானம் மற்றும் உண்டு
இந்த எமகண்டம் தனக்குச் செல்ல - வழி
இவர்களைக் கேட்டால்தான் இயம்புவரே!

## மோட்ச நரகம்!

நல்லின்ப மேமோட்சம்; பொய்யே பாவம்;
நனிதுக்க மேநரகம்; விதியே சோம்பல்;
சொல்லுமறு பிறவியே ஏ மாற்றம்; நம்மைச்
சூழ்பயம்பேய்; குறைமனமே, சகுனக் குற்றம்;
பல்லுயிர்க்கும் இரங்குமனப் பான்மை நோன்பு;
பகரும்பொது நன்மையதே "பக்தி" யாகும்:
எல்லையிலாத் தைரியமே துணைய தாகும்
இயற்கையெலாம் கடவுளென இயம்பலாமே!

# சமதர்மம்

(அன்னையும் தந்தையும்தானே என்ற இசை)

## பல்லவி

சத்யமும் தன்மமும் ஓங்க—காணும்
சஞ்சலம் பட்டினிப் பஞ்சமும் நீங்க (ச)

## அநுபல்லவி

சாதி வித்யாசமே வீழ்க—ஈனத்
தன்னல மற்றதோர் பொது நலம் சூழ்க
நீதி புத்தன் அவ்வை பிராட்டி—மற்றும்
நேர்மை சேர் வள்ளுவர் அருநெறி பரவும் (ச)

## சரணம்

ஏழையர் உழைப்பினை உறிஞ்சும்—கெட்ட
இழிமனப் பான்மைகள் யாவையும் சேர்த்து
ஆழமாம் பள்ளத்தில் புதைத்து—நன்றே
ஆக்குவோம் நாட்டில் சமதர்ம வீட்டை
அன்றல்லோ யார்க்கும் நல் வாழ்வு—இந்த
ஐக்ய உலகினில் அணுகாது தாழ்வு
இன்பக் கவி முருகேசன்—சொல்லும்
ஈடில்லா செந்தமிழ்ப் பாடல் துலங்கும் (ச)

## தாமரைப் பெண்

அங்கமெலாஞ் செக்க சிவப் பழகு பெற்றாள் !
அடங்கி மிக உளம் ஒடுங்கி, யேங்கி நீரில்
கங்குலெலாம் தன்விழியை மூடி, ஒற்றைக்
காலாலே தனிநின்று, தவமி யற்றிப்
பொங்கி யெழுந் தனதாசை உணர்ச்சி தன்னைப்
புற்றினிற்பாம் படங்கினதைப் போல டக்கிச்
செங்கதிரோ னுந்தனது காத லன்றன்
திருமுகங்கண் டேநகைத்தாள் கமலப் பெண்ணாள் !

## இசை !

ஆடி யெழும் நச்சரவம் ! பசுவமுதம் நனிபொழியும் !
அழுஞ் சேய் தூங்கும்!
நாடி வரும் பாதாளத் துறைநீரும் ! மலைக் கல்லும்
நகரும் ! ஈண்டும்
கூடியழும் பெண்களது களைதீர்க்கும் ! அலையு மனங்
கூம்பும் ! ஒன்றாய்ச்
சாடி யெழும் மதகரியும் தம்பிக்கும் ! இசையின்ப
சக்தி யாலே !

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 1514
காமராசர் பல்கலைக்க
அவ்வை
சண்முகம் நூலக

# காலை விழிப்பு

**பியாகு** பல்லவி **ஆதி**

சோதி சொருப வானில்—ஞான
சூரியனும் எழு முன்னே

அநுபல்லவி

நீ துயிலொழித் தெழுவாயே
காதலாய் மேதினி மீதே (சோ)

சரணம்

செக்கச் சிவந்து வரும் வானம்
செங்கதிர் வருவதன் முன்னம்
குக்குடம் காகமும் ஒலிக்கும்
குளத்தினில் தாமரை மலரும் (சோ)

இல்லாதவன் தனிகன் மற்றும்
இழி குல முயர் குல மென்ற
பொல்லாத பேதங்க ளெரியப்
புவியை யணைத்துக் காயும் அரிய (சோ)

வன்ன மலைகள் உடல் மறைத்து
வண்ணம் வழியும் பனிப் போர்வை
தன்னை களையும் ஒளி வெள்ளம்
தண்டமிழ் முருகேசன் விள்ளும் (சோ)

**சிந்து பைரவி** பல்லவி **ஆதி**

வேண்டாமே இன்னும் உறக்கம்
கண்ணை விழித் தெழுமனமே (வே)

அநுபல்லவி

கூண்டுறை பறவைகள் விழித்தே
குதூகல மாகப் பண் ணிசைத்தே
தூண்டுவ தறிந்துனக் கின்னும் மன்மே
சுறுசுறுப் பில்லையோ தினமே (வே)

தொகை

காலை விழிப்பின் குணம் ஆயுள் விருத்தி
கண்ணியம் மன அமைதி திண்ணியம் சித்தி
சாலவும் தெளிவுறும் மேலான புத்தி
சாந்தமும் உடல் வளமும் வாய்ந்திடும் சக்தி

பாட்டு

சாற்றுவ திதை அறிவாயே
சந்ததம் கடைப் பிடிப்பாயே
ஏற்ற நல் வாழ்விற்கிது முதல் பழக்கம்
இன் கவி முருகேசன் கண்டு உரைக்கும் (வே)

## மஞ்சள் மகத்துவம்!

தோற்றமிக விழிக்குநல்ல விருந்த ளிக்கும்!
சுத்தஞ்செயும் ரத்தமதை சுகம்வ ளர்க்கும்!
ஆற்றினிலே நீராடும் பெண்கள் பக்கம்
அணுகாது முதலை; இதன் வாடை வீசும்!
நாற்றமதைத் தடுத்தின்ப மணமே சூழும்!
நாயகன்றன் மனங்கவரும்: நன்முகத்தில்
மாற்றுயர்ந்த பசும்பொன்னைப் போலி லங்கும்
மஞ்சள்தனி அழகுசெயும் மாதர் கட்கே!

## சுக வழி

அகம் வாக்கும் உடற் சுத்தம் அனவரதம் ஆக்கி
அதிகாலை விழித்துமல சலமதனைப் போக்கிப்
பகற்றூக்கம் மிகப் புணர்ச்சிப் பாழும்மது குடிகள்
பான்மையிலாப் புகைகுடித்தல் பலவகையும் நீக்கி
இகமீது நெய்யுருக்கி இன்பால் நீர் காய்ச்சி
ஈ மொய்த பொருள்தடுத்து இரவுகறி யொழித்து
சுகக் காற்று உடற் பயிற்சி சுத்த வுடை கண்டுஞ்
சூழ் சன்னல் வீடமைத்தல் சுகவழிகாண் பாயே

அங்கந்தனைக் காலைமாலை வெயிலில்நிதம் குளித்தே
அனுதினமும் அடிக்கடிக்குச் சுத்த நீரைக் குடித்துக்
கங்குலுண்ட பின்னுலவிக் காய்கிழங்கு கீரை
கனி பருப்பு நல்லவகை கலந்துணவு உண்டு
பங்கமிகும் அசுத்தம் பல மிதிப்பதனை நீக்கப்
பாதரட்சை தானணிந்து பரவுந்தொத்து நோயார்
தங்குசலத் துறையுங் கொசு தன்பூச்சிப் புழுக்கள்
தனையொழித்தல் சுகவழியாா் தாரணியில் மாதோ !

(மனங்கனிந்தே என்ற இசை.)

பல்லவி

சுகத்துடனே பூவில் வாழ்வோம் பல் லாண்டு

அநுபல்லவி

இகத்துறும் பொல்லாப் பிணித டுப்போம்
இன்பத் தோழிகாள்! இதையறிவீரே ! (சு)

சரணம்

கூட்டும் குப்பைகளைக் கொண்டுவந்து
கொட்டுவீர் குப்பை தொட்டியில்,
வீட்டெதிரில் மல மூத்ராங் கழிப்பதால்
வேதனை மிஞ்சும் தீதை யழித்து (சு)

நோய்கள் நம் செய்கையால் வந்தழிக்கும்
நுண்ணறி விழுந்தே கொடும்
பேய் சூனியம் இதனாலே வந்ததாய்ப்
பேதமை கொண்டோர்க் கோதி யுணர்த்தி (சு)

ஈக்கள் கொசு எதிர் தங்காமலே
எங்கும் நாப் பறை சாற்றுவோம்
ஊக்கமுடன் முருகேசன் செந்தமிழ்
ஓதரும் இன்பக் கீத முணர்ந்து (சு)

## கிளிக்கண்ணி இசை

பஞ்சவர்ணக்கிளியே பவளவாய் செங்கிளியே
கொஞ்சும் பசுங்கிளியே கிளியே
குணமிகத் தூது சொல்வாய் கிளியே

கொடியப் பிணிக்குத் தோழன் கொசு ஈக்கள் மூட்டுப் பூச்சை
அடியோடழிப்பாயடி கிளியே
ஆனந்தம் பெறுவாயடி கிளியே

தினம் நீரிலே குளிக்க சொறி சிரங்கு வாராதடி
உணவை மூடியே வைப்பாய் கிளியே
உடைகளைத் தோய்த் துடுப்பாய் கிளியே

வீடு தூய்மையாயிருந்தால் வீதி தூய்மையாயிருந்தால்
கேடுசூழ் வியாதி யொன்றுங் கிளியே
கிட்டவும் நெருங்காதடி கிளியே

அவரவர்வயதிற்கேற்ப அரும்உடற் பயிற்சி செய்தால்
நவசுக வாழ்வு பெற்றுக் கிளியே
நன்மை பெறுவாரடி கிளியே

அம்மைக் குத்திக் கொள்ளாவிடில் அம்மையெனும் வியாதி
அம்மன் குறையென்று சொல்லி கிளியே [வரும்
அறிவை யிழக்காதடி கிளியே !

காற்று வெளிச்சங்கூடி கலந்துபுகாத வீட்டில்
மாற்றுனார் நோய்புகுவான் கிளியே
மனத்திலிருத்திவாழ்வாய் கிளியே

மண்டலத் தொண்டர் நேசன் மதுரகவி முருகேசன்
தண்டமிழ் கேட்பாயடி கிளியே
சவுக்கி யமாய் வாழ்வாயடி

## காதல் மணக் கொலே!

பஞ்சாங்கம் பார்ப்பானைப் பொருத்தம் கேட்பார்
பையன் பெண்ணின் உடல்உள்ளப் பொருத்தம் பாரார் !
பிஞ்சைப்போல் பெண்ணிருக்கும் ஆண்ப மூத்த
பெரும் பழம்போல் தானிருப்பன். பின்னும் சொல்வேன்:
அஞ்சடிக்குக் கீழிருக்கும் ஆணின் தோற்றம்
அவனைவிட உயர்ந்திருக்கும் பனைபோல் பெண்ணே !
கொஞ்சு கிள்ளை போன்றவளை க்குருட ருக்கும்
கொடுப்பரய்யோ ! காதல்மணக் கொலை செய்வாரே !!

வரப்போவர் ஆண்வீட்டார் பெண்வீட் டுக்கே !
மணமகளைப் பார்க்கவரு வார்பெண் வீட்டார் !
ஒருநாளுந் அத்துணைவர் நேரில் நேராய்
உளமாரக் கண்டறிய ஒன்றுஞ் செய்யார் !
இருவிழிகள் துடித்தேங்கும் கலப்ப தற்கே;
எதிர்பார்க்கும் அறிவோ தேர்ந் தெடுப்ப தற்கே !
திருமணமோ கூடும்மனந் தனித்து நிற்கும் !
சிறப்பாகக் காதல் மணக் கொலை செய்வாரே !!

# இயற்கை எழில்

ஆடுகின்ற மயில் நடத்தில் தென்றற் காற்றில்
அரும்மழையில் நீர்த்துளியில் எரிநெருப்பில்
பாடுகின்ற குயிலிசையில் அடர்பூங் காவில்
பனித்துளியில் இளஞ்சேய்கள் மழலைப் பேச்சில்
சோடுபுறு கொஞ்சுதலில் வயிரக் கற்கள்
தொட்டிரைத்தாற் போல்தோன்றும் வான மீனில்
காடதனில் பெருமலையில் காதல் வாழ்வில்
காண்போமே இயற்கையெழில் காட்சி தானே !

சீருதயச் சூரியனில் மாலை வானில்
தெளிந்தமுழு நிலவதனில் வான வில்லில்
பேரழகில் மங்கையர்தம் புன்சி ரிப்பில்
பேசுமவர் கிளிமொழியில் ஊடல் தன்னில்
நீரருவி குதித்தோடும் பெருவெள் ளத்தில்
நீலபெருங் கடலலையில் அவற்றைத் தாவும்
கார்மேகச் செறிவதனில் கவரும் மின்னில்
காண்போமே இயற்கையெழில் காட்சி தானே !!

# பெண் அழகு

கன்னல்மொழி மாதருக்குக் கருங்கூந்த லே அழகு !
பொன்னிறமஞ் சளினழகு! பொட்டழகு! பூ வழகு !
பொன்னகைதம் பலவழகும் உடையழகும் புறவழகே!
புன்னகை கல் வியொழுக்கம் போற்றும்அக வழகாமே! !

# வாழ்க்கைத் துணைவர்

**மனைவி**

புன்னகையால் தேன்மொழியால் குளிர்ந்த நோக்கால்
பொருந்த வர வேற்றின்ப உணவு நல்கித்
தன்கணவன் குறிப்பறிந்து, மாமன் மாமி
தமரார்களை விருந்தினரை உபச ரித்து,
அன்பாக வரவுக்கும் செலவே செய்து,
அந்தந்தப் பொருளிருக்கும் இடத்தில் வைத்து
இன்பளிக்கும் அருமருந்தைப் போன்ற வளே
இல்வாழ்க்கைத் துணைவியென இயம்ப லாமே!

**கணவன்**

ஆதரவாய்ப் பெற்றவராய் அனைத்துந் தானாய்
ஆடைஉண விற்சாமாய்த் தனது டம்பில்
பாதிமனை யானெனுமெய்க் கூற்றை யோர்ந்து
பலவழியி லவளைமன மகிழச் செய்து,
ஓதரிய தாய்க்குப்பின் தார மென்றே
ஒருபொழுதும் காவுநினைப் பின்றி தூய
காதல்கனி யெனஅவளைக் கண்ட கத்தே
களிப்பவனே கணவனெனக் கருதலாமே!

# பெண்ணின் பெருமை

(அந்நிய சீமைதுணி என்ற இசை.)

'பெண்மணிகளுலகக் கண்மணிகளா' மென்ற
உண்மை யுணர்ந்தாயானால்—என்றன் தோழனே
ஒன்றுங்குறை நேராதடா—என்றன் தோழனே (பெ)

தாயாம் தோழி தமக்கை தங்கை நன்மந்திரியாம்
நேயப்புவியாம் பெண்ணும்—என்றன் தோழனே
நேர்வாழ்க்கைத் துணைவியுமாம்-என்றன் தோழனே (பெ)

அகில உலகியிற்கை அழகனைத்தும் திரண்டு
நிகரில்லாப் பெண்ணுருவாய்—என்றன் தோழனே
நேரினில் காணுதடா—என்றன் தோழனே (பெ)

பெண் தெய்வமில்லை யென்றால் பிரபஞ்சத் தேயுறையும்
எண்ணுடலுயிரேதடா—என்றன் தோழனே
இன்பநிலை தானேதடா—என்றன் தோழனே (பெ)

இன்பக் கரும்பைத் தேனை யாழின் இசை யமுதை
பொன்னை முத்து மணியை—என்றன் தோழனே
போன்ற பெண்ணருமருந்தாம்-என்றன் தோழனே (பெ)

பெரும் போறிஞர்களை பிரபல வீரர்களை
அருங்கவி வாணர்களை—என்றன் தோழனே
அளித்தவர் அவர்களன்றோ—என்றன் தோழனே (பெ)

பூவையர் உரிமையிலே பூத்து மலர்வதுவே
ஆவலுறும் நாகரிகம்—என்றன் தோழனே
அறிந்தும் மறந்த தேனோ—என்றன் தோழனே (பெ)

சீரானப் பெண்ணில்லையேல் சிறப்பேது ? அன்பேது ?
சோறேது ? சுகமேதடா—என்றன் தோழனே
சொல்லுந் தெய்வந்தானேதடா—என்றன் தோழனே (பெ)

மாதர் விடுதலையின்றி மாநில விடுதலைக்கு
காதலே கொள்வதெல்லாம்—என்றன் தோழனே
கனவாக முடியுமடா—என்றன் தோழனே (பெ)

அரிவையர் தான் வருந்த அகிலமெல்லாம் வருந்தும்
தெரியவே சொன்னனடா—என்றன் தோழனே
தேன்கவி முருகேசனே—என்றன் தோழனே (பெ)

## எண்ணிப் பார் !

எட்டுவேளை பத்துவேளை இனிய உணவு உண்பவன்
எல்லாபோக வாழ்விற்றுய்த்து செல்வந்தன்னிற் புரள்பவன்
கட்டிற்பஞ்சு மெத்தைமீது காலமெல்லாம் வாழ்பவன்
கால்பிடிக்கக் கைபிடிக்க ஆள்கள் பலகொண்டவன்
பட்டினியால் துடிப்பவனை, பூலமணிகள் தானியம்
பாரிற்கண் டளிக்கும் ஏழை பட்சதொழிலாளனை
" இட்டகடவுள் செயலால்நீயே யேழையாகப் பிறந்தனை !"
என்றுயேய்க்கும் கொடுமைபோக்க எழுச்சிகொள்வீர்
[உர்முளே !

# இளங் கைம்பெண் வருந்தல்

சாவேரி பல்லவி ஆதி

ஏனோ நானோர் பெண்ணாய்ப் பிறந்தேனே—வீணே (ஏ)

அநுபல்வி

ஞானமில்லா நயவஞ்சகர்முன்—வீணே (ஏ)

சரணம்

வாசனை யில்லா மலரானேன்நான்
வாலிப தசையில் தாலி யிழந்தேன்
காசினி பழிக்கும் கைம்பெண்ணானேன்
கன்மன வைதிகர்க்குள்—வீணே (ஏ)

பறக்கும் கிளியைக் கூண்டிலடைத்து
பதைக்கும் அதனைப் பார்த்து மகிழும்
இரக்கமில்லா ஈனர் நடுவே
இறவா நடைப்பிணமாய்—வீணே (ஏ)

உணர்ச்சிப் பெருக்கைக் கொலையே செய்தார்
உடலைவளர்க்க உணவே அளிப்பார்
மணமார் முருகே சன்பா உணர்ந்தே
மதியை பெறுவாரோ—வீணே (ஏ)

# தமிழ்

(பரனடியே தினம்பணி மனமே என்ற இசை.)

### பல்லவி

தமிழ் மொழியே நமக்குயிர் மனமே (த)
உயிர் மனமே இதை உணர் தினமே—அருந் (த)

### தொகை

அமுதமும் முக்கனியும் தேனும்
அரிய கரும்பின் சாறும்
கமழ் இளநீரும் பாகும் ஒன்ருகக்
கலந்த தைப் போன்ற (த)

### தொகை

மேனாட்டில் கீழ் நாட்டில் மற்றெல்லா நாட்டிலும்
மேன்மையுறு பசுவும் கன்றும்
தானுக 'அம்மா' வென்றே நம் தாய் மொழியில்
தனிச் சிறப்புடன் அழைக்கும் (த)

### தொகை

வள்ளுவன் அவ்வையார் மூவேந்தர் மடியிலும்
வளர்ந்து தவழ்ந்து உலகம்
உள்ளளவும் அழியாது மதுரகவி முருகேசன்
உள்ளொளிர்ந் தோங்கும் (த)

# மங்கையர் முறையீடு!

பூவுலகு தன்னிலே பெண்களை யடிமையாய்
புறக்கணித் திர்புமுவ தாய்
புலன் பொறி பகுத்தறிவு எங்களுக் கில்லையோ ?
புயபல வீரமு மில்லையோ ?
“ பாவ ஜென் மங்க ” ளென் பீரவர்க ளாற் பெற்ற
பல ஆண்கள் பாவி அலவோ?
பாரினில் கணவனே தெய்வமு லையடுப்
பங்கரை யோட்ச மென்பீர் !
காவல் கற் பென்பீர்கள் நீர்மட்டும் மனம்போலக்
கண்ட பெண் பின்செல்லு வீர் !
கல்லுங் கணவன்எனப் புல்லும், புருடன் மரம்
களிமண் ணும் துணைவ னென்பீர் !
ஆவல்மிக நீர்மட்டுங் கைம்மைநிலை கொள்ளாது
அரிவையரை ‘ முண்டை ’ என்பீர்
அநியாய மினிசொல்ல லாகாது பெண் கொடுமை
ஆண்களின் நீதி யிதுவோ?

தடுப்பீர்கள் பெண்மக்கள் கல்விசொத் துரிமையைத்
தாங்களே உயர்ந்த கல்வி
தனைப் படிப்பீர் நாங்கள் கல்விகேட் டால்மதம்
தான் போச்சு தென்று கூறி
அடுப்பூதும் பெண் ணுக்குப் படிப்பெதற் கென்பீர்க
ளறிவுள்ள ஆண் களுக்கே
ஆயகல்வி வியுமெதற் கென்றுயாம் கேட்டிடி
லாந்தையென விழி விழிப்பீர் !
கொடுப்பீர்கள், தள்ளாத கிழவனுக் கிளம் பெண்ணைக்
கொல்வீர வ ரின்பவாழ்வை !
குறையிலா நகைகளணி விப்பீர்க ளுடலுக்கு !
கோழையாய் செய்வீர் நெஞ்சை !
தொடுப்பீர் பொய் ‘மாதரை நம்பலா கா’ தென்று !
தோகையர்க ளில்லை யானல்
சோறேது? நன்மக்கட் பேறேது ? உணர்ச்சிதருஞ்
சுகமேது ? உலகேது ? காண் !

'திருடனென் றாலுமவன் தெய்வமாவா' னெனச்
செப்புவீர் பொய்க் கதைகளே!
தேகமிக வழுகிய ரோகியென் றாலுமவன்
தின்றதையுந் தின்னல் வேண்டும்!
குருடன் செவி டூமையா னாலுமவன் றனை நீக்கிக்
கொள்ளுமண வுரிமை தாரீர்!
கோதிலாக் காதல்மணக் கலப்புமண விதவைமணக்
குலாவலின் தூய்மை யறியீர்!
புருடர் முழு வயிறுண்பீர்! பலவேளை உண்ணுவீர்!
பொருந்துமோ? அம்ம! அம்ம!!
பூவையரை லாம்உண்டி சுருங்குதல் அழகென்று
புகலுவீர், மான மின்றி!
ஒருத்திபோ னாலென்ன ஒருநூறும் நாடுவீர்!
உற்றயாம் பிறரை நோக்கின்
ஓலமிட்டு றுமியே கற்புபோச் சென்பீர்கள்
ஒருபாலார்க் கொருநீதியோ?

கள்ளத்தன மாகமுன் வினைதலை விதியினைக்
கற்பிப்பீர், புத்தி யற்று!
கண்மணிக ளைப்போன்று பெண்மணிகளை நெஞ்சிற்
கருதிடும் மேன்மை காணீர்!
பிள்ளைகளைப் பெறுகின்ற யந்த்ரமென வேயெண்ணிப்
பெருமிதங் கொண்டு நாளும்
பேதங்கள் வகுத்திழிவு பேசிடும் மடமையைப்
பெரிதகற் றாது போனல்!
எள்ளி நகை யாடிடும் பகுத்தறிவு வையகம்
ஏமாந்தி ராது இன்னும்
எல்லாவி தக்கொடுமை யினையடித் துக்கொண்டு
ஏகிடும் பொது வுரிமையாம்
வெள்ளத்தில் நும்மோசு தந்தர அணை நில்லாது
வீண்வாத வைதிகர் களே!
வேகமாய்க் காலசக் கரமியங் குதல்கண்டு
வியன்மதி துலக்கு வீரே!

# தமிழன்னை முறையீடு!

ஆதியிலிவ் வுலகந்தனில் அனைத்திலும்நீ உயர்ந்திருந்தாய்!
பாதியிலே கீழ்விழுந்தாய், பரதேயக் கூட்டுறவால்!
பேதைநினை நான்காணப் பெற்றவயி றெரிகிறதே
ஆதலின லினியேனும் அறிந்துணர்ந்து வாழ்வாயே!

சாரமிகுங் காவியங்கள் தனித்தமிழ்நூல் களைமறந்து
பாரதரா மாயணமே படிப்பதிலே நாட்கழித்து
கோரமிகும் வடநாட்டுக் கொள்கைகளில் ஏமாந்தாய்!
ஈரத்தமிழ் தனிமகனே! இன்றே கண்விழிப்பாயே!

பிழைக்கவந்தோர் மாளிகையில் பெருப்படிப்பில் சுகவாழ்வில்
செழிக்கநனி வாழ்கின்றார், செம்பொன்மே னியராக!
இழிநிலையில் சிறுகுடிசை யில்லத்தில் நடைப்பிணமாய்
அழியாமலகக்கண்ணில் ஆய்ந்திவற்றைப் பார்ப்பாயே!

தன்னலஅன் னியநாட்டார் தலைசாமி யெனத்துதித்தே
என்னுதரந் தனிலுதித்த இயல்ஆதி திராவிடரைச்
சின்னமதி யாற்புவியில் 'தீண்டாதா' ரெனவெறுத்தங்
கன்னவர்தம் உரிமைகளை அழித்துமதி யழிந்தாயே!

தெருவோரங் களிலெனது செல்வகுழந் தைகள்புழுவாய்
பரிதாபமாய்த் துடிக்கப் பார்த்துமன மிரங்காமல்
அரும்பாலைக் குடங்குடமாய் அறிவிழந்து சிலைக்கூற்றும்
தருமநெறி இதுதானோ? தமிழ் மகன்நீ உரைப்பாயே!

அமுதில்நஞ்சு கலந்ததைப்போல் அருந்தேனைப் போன்றதொரு
நமதரிய தமிழ்மொழியில் நஞ்சான பிறமொழியைச்
சமயமறிந் தேபுகுத்தித் தனியழகைக் கெடுத்துலகில்
மமதைகொளுங் கயவர்களின் மனக்கோட்டை யிடியாதோ?

நாமம்விபூ திச்சண்டை நாலாயிரம் சாதிச்சண்டை
சாமிகளின் பிரிவுசண்டை சமயவேதச் சண்டையொடு
தீமைதருஞ் சண்டைபல செய்தரிய பழம்பெருமை
சேமதிரா விடநாட்டின் சீர்குலையச் செய்தாயே!

# தொழிலாளர் துயரம்!

**புன்னாகவராளி** **ஆதி**

சொல்லக் கொடுமை! நாவால் சொல்லக் கொடுமை!
தொழிலாளர் எங்களுக்கோ இல்லை உரிமை!
செல்வநிறை முதலாளிச் சீமான்களே!
சித்தமிரங்காத தேனோ பூமான்களே!
செய்யாதீர்! செய்யாதீர்!
செகத்திலெங்கட்குத் துரோகம் செய்யாதீர்! (1)

மலையைக் குடைந்து பெருங் கற்கள் வெட்டினோம்!
மார்பு துளைத்திட மதில்கள் கட்டினோம்!
அலைகடற் செல்லும் பலக் கப்பல்கள் செய்தோம்!
ஆரண்யங்களழித்தரும் ஊர்களைச் செய்தோம்!
ஆலைகள் செய்தோம்! பாதை யமைத்தோம்
சாலையுடன் சோலைகளை மேலும் வளர்த்தோம் (2)

நேர்த்தியான வெண்ணெய் தயிர் பால் மோரு
நீங்களுண்ணப் பாங்குடனே நாங்களளித்தோம்!
பாத்திரங்கள் பலவகை பரிந்து செய்தோம்!
பனிமழை வெயிலாலு முடல் தளர்ந்தோம்!
பலச் சீனி நல்ல வெல்லம்
இலைக்கறி காப்பி டீயும் விளையச் செய்தோம்! (3)

அருமையாய் ஆடைகளை நாங்கள் வெளுத்தோம்!
அழகாக முகங்காண சவரம் செய்தோம்!
தெருக்கூட்டி யசுத்தமே சேரா தொழித்தோம்!
தேடரிய பாய்கள் பின்னிக் கூடை முடைந்தோம்!
தேனை யளித்தோம்! மீனைப் பிடித்தோம்!
தேங்கனிகள் காய் கிழங்கு நாங்களளித்தோம்! (4)

சங்கீதக் கருவிகளைப் பொங்கமாய்ச் செய்தோம்!
சரியாகக்கேணி குளம் அரிதாய் கண்டோம்
“பங்கா” யிழுத்தோர்! படுக்க பஞ்சணை செய்தோம்!
பாசமுறு நாய் போலுங்கள் வாசலைக் காத்தோம்!
பண்ணைகள் கண்டோம்! எண்ணெய் கொடுத்தோம்!
மண்ணுக் குளிறங்கி செத்துப் பொன்னை எடுத்தோம்! (5)

பஞ்செடுத்து நூலாக்கி ஆடைகள் நெய்தோம்!
பாரிலவரை நிர்வாணமாய் நேரினிலுய்தோம்!
கஞ்சியின்றி வயிறொட்டி நாங்களிளைத்தோம்!
கலங்கலந் தானியங்கள் கண்டே அளித்தோம்!
காடு வெட்டினோம்! வீடு கட்டினோம்!
பாடுமிக மூட்டை முது கூடே தூக்கினோம்! (6)

பண்டம் உண்டிகள் சமைத்தோம்! தோலை வெளுத்து
பாதரட்சை செய்தோம், மண்ணால் பானைகள் செய்தோம்
வண்டி யிழுத்தோம் உவர் வாரியில் மூழ்கி
வண்ண வண்ண முத்துக்களை வாரிக் கொடுத்தோம்
வல்ல யந்திரம் எல்லாம் முடித்தோம்
சொல்லு நிலக் கரியையுங் கல்வி எடுத்தோம்! (7)

சுத்தமாய் எழுத்துசெய்தே அச்சு அடித்தோம்
திகழ்பொன்னால் வெள்ளியினால் நகைகள் செய்தோம்
கத்திபீரங்கி துப்பாக்கி மொத்தம் படைத்தோம்
கனிகண்டு வெள்ளிசெம்பு நனிவெட்டினோம்
கண்ணாடி செய்தோம் காகிதஞ் செய்தோம்
எண்ணெண்ணைப் பலப் பொருளை மண்மீது செய்தோம் (8)

சேற்றினிலே புழுவென நாற்றுக்கள் நட்டோம்
செக்குமாடெனவே ரத்தம் கக்கியே விட்டோம்
ஏற்றமும் தானிறைத்தோம் ஏருமுழுதோம்
எல்லா வண்டி வாகனங்கள் நல்லதே செய்தோம்
இப்படி யுண்மை ஒப்ப விருக்க
எப்படியும் எங்கள் பழியப்பா விடுமோ? (9)

உற்றதொழி லாளர்களின் விடுதலையே
உலக விடுதலை யென்றுண ராதோர்
பற்றில்லா யேழைக்கண்ணீர்க் கிரங்காதோர்
படுகுழி வீழ்வதன்றி வாழ்வேது
பதிமீது—பதிமீது
பைந்தமிழ் முருகேசன் பண்பாடி. (10)

## பழந்தமிழ்க் கொடி

தமிழ்க் கொடியே பழந் தமிழ்க் கொடியே
தன்மதிப் பிலுயர்ந்த தமிழ்க் கொடியே
நமது உயிர் வளர்க்கும் சீவக் கொடியே
நல்லுழவு தொழிற்புகழ் மேவுங் கொடியே

இன்ப சமா தானவாழ்வின் வெள்ளைக் கொடியே
ஏரில் ரெண்டு காளைபூட்டி உள்ளக் கொடியே
அன்புறும் விடுதலைக்கு ஆன கொடியே
ஆக்கிக் காத்து அழிக்கும் ஞானக் கொடியே

நங்கையர்க்குள் ளுரிமையுறுங் கொடியே
நாகரிகத்தில் முதன்மை பெறுங் கொடியே
சங்கம் என்றென்றும் போற்றிவருங் கொடியே
சத்தருமப் பயிரைத் தருங் கொடியே

சாதிமத பேதமற்ற நீதிக் கொடியே
சமத்துவ மேயளிக்கும் போதக் கொடியே
மேதினிக்குப் பொதுவான ஆதிக் கொடியே
மெச்சு முருகேசன் இன்பக் கீதக் கொடியே.

## உழவனின் உயர்வு

எல்லார்க்கும் உணவளிப்பான் உயிரளிப்பான்
இவ்வுழவன் செல்வமெலாம் ஏரும் மாடும்
கொல்லையிலோர் முருங்கைமரம் குடிசை வீடு
கூடைமுறம் வைக்கோற் போர் கயிறுஞ் சாலும்
'பல்லரிவாள்' மண் வெட்டி மற்றும் உற்றப்
பயிர்த் தொழிற்கு வேண்டும்பல சாமா னோடு
செல்வமுடை யோர்மற்றோர் தங்கள் வாயால்
செப்பிடும் 'நாட் டா' னென்ற சிறப்புப் பேரே!

'நாட்டான்' செய் உழவுதொழி லில்லை யென்றால்
நானேது? நீயேது? நகரம் ஏது?
காட்டானை போலுடம்பு பருப்ப தேது?
கனகம் முத்து ரத்தினத்தை யாரே உண்பர்?
பாட்டாளி யிவன்ரத்த வேர்வை நீராய்ப்
பாய்ச்சிப் பயி ரிட்டசீவ ரத்ன மான
மேட்டிமையாம் நெல்மணியைக் கண்ட ளிக்கும்
மெச்சும் உழ வன்தொழிலே புனிதந் தானே!

புனிதசுதந் தரவுழவு தொழிலை யன்றிப்
பூவுலகில் நம்வாழ்க்கைக் குரிய தான
மனிதன் செயும் எத்தொழிலும் இதற்கி டாமோ?
மன்னன் செங்கோலைத்தாங்கும் ஏர டிக்கும்
தனி சிறுகோல் தானன்றோ! ஈதொன் றின்றேல்
தனிகர்க்குளே விருந்தேது? களிப்பு மேது?
நனியுணர்ந்தால் யாவரினும் உழவன் தானே
நானிலத்தில் உயர்ந்தோனென நவில லாமே!

# தீண்டாமை

(சிறைக்குள் புகுந்த மனமே என்ற இசை.)

பல்லவி

தீண்டாமை வித்தியாசம்—நிறைந்ததால்
சீரழிந்ததே தேசம்—பொல்லாத (தீ)

அநுபல்லவி

வேண்டாத ஆபாசம்—இதை விட
வேறில்லை முழுமோசம்—பொல்லாத (தீ)

தொகை

ஆடுமாடு கழுதைப் பன்றிநாய் குடிக்கும் நீரை
ஆறு அறிவு மக்கள்
நாடி குடித்திடவுந் தொடக்கூடாதப்படி செய்தார்
நாயும் பூனை
ஓடும் அணில் கிலி ஒணான் பறவை வௌவால் புகுங் கோயில்
உள் உரிமை
கூடி ஒரு சமுகஞ் செல்லத் தடுத்தோரின் மிருககுணம்
கூற வெட்கம்!

சரணத் தொடர்

கொடுமைக் குயர்ந்தக் கூட்டம்—வைதிகக்
குடுக்கைக ளார்ப்பாட்டம்—இதனைக்
கடுமையாய் சேர்ந்து ஒழிப்போம்—மதுரக்
கவி முருகேசன் உரைக்கும்—பொல்லாத (தீ)

## தாழ்ந்தவர்

ஈனசோம் பேறி உடம்பினைச் சுமந்தே
ஏழைய ருழைப்பினைக் கவர்ந்து
மானமில் லாது வயிறுவ ளர்ப்பார்
வாழ்க்கையிற் பொதுநலங் காணார்
ஞானமில்லாத மௌடிகப் பழக்க
நாற்றமாம் சேற்றினி லுழல்வார்
தீனருக் கிரங்கா லோபிய ரிவரே
செகமிசை தாழ்ந்தவ ராவர் !

## உயர்ந்தவர்

இனத்திமி ரழித்தார் ! பொதுநலங் காண்பார் !
ஏழையர்க் கிரங்கிடும் பண்பார் !
கனநிறை யொழுக்க நெறியினிற் பிறழார் !
கைத்தொழில் புரிந்துயிர் வாழ்வார் !
மனத்திலுந் தீமை பிறர்க்கென்றும் நினையார் !
மக்கள்தம் இனமொன்றாய்க் கருதித்
தனக்கென வாழாப் பிறர்க்குரி யாரே
தரணியி லுயர்ந்தவ ராவார் !

## ஆதி திராவிடர் அகம் உருகல்

(வானத்தின் மீது மயிலாடக் கண்டேன் என்ற இசை)

நீதியோ இனியும் நேர்மையோ உமக்கே
நேசரே! நீர் உரையும்!
ஆதிதிராவிடர் எங்களின் குறையை
ஓதக் கல்லுங் கரையும்!

பத்துவயது பையனும், தந்தையும்
பத்துமாதக் கர்ப்பிணி
உத்தம மனைவியும் மாடாயுழைத்தோம்
ஓய்வின்றி ராப்பகலாய்!

கோயிலைக் கட்டினோம்; குளத்தை வெட்டினோம்!
கொஞ்சமும் பயனறியோம்!
வாயிலைக் காத்தோம்! நெல்லை யறுத்தோம்!
வாரியுள்ளே சேர்த்தோம்!

மாளிகை கட்டி கொடுத்தோம் உமக்கே!
மண்ணில் படுக்கை எமக்கே!
தோளும் முரிய மூட்டை சுமந்தோம்!
துக்கம் பொங்குது உரைக்க

எங்கள் குழந்தை மாடு மேய்க்க!
உங்கள் குழந்தை படிக்க
எங்கள் வயிறு ஒட்டியே பதைக்க
உங்களைவைத்தோம் கொழுக்க

பொங்கற் சோறு உமக்கே அளித்தோம்!
புளித்த கூழ் குடித்தோம்!
தங்க மணியை யெடுத்தே கொடுத் தோம்!
தரித்திரராய்த் துடித்தோம்!

தோலைக் கொடுத்துச் சுளையை விழுங்கி
சுகித்தீர் மக்களாக!
ஆலைக் கரும்பாய் உடலைக் கசக்கி
அலைந்தோம் நாயாக!

மங்கையர் கழுத்தில் அங்கியாய்த் திகழும்
தங்க நகைகள் ஏது?
எங்களின் உழைப்பால் வந்ததை மறந்து
இன்னுஞ் செய்வதோ சூது!

எங்களின் மீட்சிதான் சுய ஆட்சி
என்பதை மறவாதீர்!
சங்கங்கள் கூட்டி எங்களுக்கும் சாற்றிச்
சமவுரிமை தருவீர்!

எங்கேயோ இருந்து வந்தோரை யெல்லாம்!
ஏத்துறீர் "சாமி" யென்று!
உங்களின் கூடப் பிறந்தவர் எம்மை
ஒதுக்குறீர் தூர நின்று!

பல கலைகளில் நல் லாற்றல் நிறைந்த
பல்லோர் எம்மிடையில்
இலகும் மணியாய் இருப்பினும் அவரை
ஏன் என்றுங் கேளீர்!

உண்பவர் நீங்கள் உழைப்பவர் நாங்கள்
ஒவ்வாதக் கொடுமை!
மண்மீதிதனை இனியும் வளர்க்க
விடவோ பெருந்தீமை!

பச்சென்றிருந்தால் கீழும் மேலும்
பார்த்தெரிவீர் மனமே!
இச்சகந் தன்னில் விலங்குகளிடத்தும்
இருக்காதிக் குணமே!

இன்னமும் எடுத்துக் கூறுவதென்றால்
இரத்தம் கொதிக்கும் ஐயே!
பன்னரும் முருகேசன் மனம் வருந்திச்
சொன்ன தெல்லாம் மெய்யே!

## திருவள்ளுவர்

பண்டைத்தமிழ்ப் பேரறிஞர் மதுரை யென்னும்
பதிதச்ச ஞர்க்கும்உப கேசி யாட்கும்
மண்டலத்தே திருச் சேயாய் வந்த எங்கள்
வள்ளுவரைப் ‘ புலேச்சி ’ யென்னும் ஆதி யாளேக்
கண்டவொரு பகவனெனும் பார்ப்பான் கூடிக்
கலந்தன்றே மகவாகப் பெற்ற ’ ரென்றே
சண்டாளர் பொய்க் கதையை எழுதி வைத்துத்
தனித்தமிழர் தமக்கிழிவைச் செய்திட் டாரே!

## தலேவன்

தக்கதோ ரெளிய வாழ்க்கையும் அன்பும்
தன்னலங் கருத்துறுத் தகையும்
மிக்கதோர் பதவி பட்டத்தில் வெறுப்பும்
மேதகு ஒழுக்கமும் உழைப்பும்
துக்கமே துடைக்க எதனேயுந் தியாகம்
செயும்துணி வோடின்ப மொழியும்
மக்கள்நன் மதிப்பும் சமதன்ம நோக்கும்
வாய்ந்தவனே உண்மைத் தலேவன் !

# பாகனும் பகுத்தறிவுப் பையனும்

ஆனைமீ தம்பாரி போட்டுக் கொண்டு—ஓர்
அந்திப் பொழுதினிற் சாலைவழி
போனானோர் பாகனும் மாடுமேய்க்கும்—அந்தப்
பொன்ன னெனும் சின்னப் பையன் கண்டு
ஏனையா யானையின் அம்பாரியில்—போட்டு
இருக்கும் பெருஞ் சுமை யாதென் றனன்.
தானியம் ஓர்பக்கம் கல்லோர் பக்கம்—பளுவு
சம எடையாக இருக்கு தென்று

சொல்லினன் பாகனும். பையன் கேட்டு—மிகச்
சோகமாய்ப் பாகன் முகம் நோக்கிப்
பல்லையிளித்துக் கலகலென்று—மிக
பரியாசமாக நகை நகைத்தே
"கல்லை நீக்கி நெல்லை மட்டுஞ்சரி—பங்கு
காண இருபக்கத்தும் அமைத்தால்
பொல்லாப்பாரம் யானைக்குங் குறையும்—பிரித்துப்
போடக் கூடாதோ முன் யோசனையாய்!"

என்று பொன்னன் அறிவு பேசினது—சினம்
யானைப் பாகனுக்கோ பொங்கினது
பன்றியே! நாயே! பொடிப் பயலே—நீதான்
பகர்வதோ புத்தி எனக் கெனவே.
கன்றுகனல் விழி வீசப் பையன்—இரு
கன்னங்கள் சிவக்க அறை கொடுத்துச்
சென்றனன் பாகனும் யானைமீதே;—பலச்
சிந்தித்தான் மனம் மேலே செல்லவில்லை.

அணிலது மரம்விட் டிறங்குதல் போல்—வெகு
அவசரமாக கீழிறங்கிப் பாகன்
பணிவுடன் பையனின் கரந்தழுவி—மேலும்
பகருவான், 'பலம் பெற்றேன்; வயதும் பெற்றேன்
துணிவுபெற்றேன் நினை யடித்திடவே—மெச்சும்
சூக்கும அறிவினில் குருடானேன்
திணித்த வயதாலே பெரியோராகார்—அறிவில்
சிறியோரும் பெரியோராவார் புவியில்'

மன்னிக்க வேண்டும் எனைத் தம்பி நீ—செய்தேன்
மந்தமதியால் பெருந்தவறே
உன்னறிவை யென்றும் போற்றிடுவேன்—இந்த
உலகுக் கெடுத்தே உரைத்திடுவேன்
ஓதிபெருத்தாற் றாணு காதெனவே—நன்று
ஓதிய ஆன்றோர் மொழிக் கிணங்க
மதி பெருத்தார் உருவிற் சிறியரேனும்—புது
வைய வீட்டைத் தாங்கும் வைரத் தூணே!

## புதுமை!

நல்லறஞ்செய் யாதவனை தரும னென்பர்!
நயனமிலாக் குருடனைக்கண் ணப்ப னென்பர்!
கல்வியிலாப் பெண்ணைச்சரஸ் வதிதா னென்பர்!
கையில்கா சில்லானைப் பொன்னி யென்பர்!
பல்வளமில் லாதவனை மன்ன னென்பர்!
பயங்கொண்ட கோழைதனை வீர னென்பர்!
பொல்லாத கோபிதன்னைச் சாந்த னென்பர்!
பொருத்தமிலாப் பெயரிதுவும் புதுமை தானே!!

# குழந்தை

கண்ணால் குழந்தை தனைக்காணின்
கடிதே மின்சா ரம்போன்று,
எண்ணம் அதன்பால் பாய்ந்துவிடும் :
இன்பம் அகத்தே தோய்ந்து விடும்!

மகப்பே றழியாப் பெருஞ் செல்வம் :
மாசணுகாநன் மாணிக்கம் :
பகைவரை நண்பர்க ளாக்கிவிடும்
பண்புறும் வாழ்வில் தனியின்பம்!

பரிதியைக் காண மரைமலருல் ;
பாலரைக் காண மனம்விரியும் :
அரிதாம் அன்பைத் தாளிட்டால் :
அதனைத் திறக்கும் அருங்குழவி!

தூய்மையிற் குழந்தை தும்பைப் பூ
சிரிப்பில் குழந்தை முல்லை மலர்
காய்தல் இல்லா செங்கரும்பாம்
களிப்பை யளிக்கும் அருமருந்தாம்

கடும்பனி யோடுங் கதிர்காண
கவல் பறக்குஞ்சேய் முகநோக்க
அடிக்குந் தாய்க்குந் தரும் முத்தம்!
அருஞ்சினம் மாற்றி நகையாக்கும்!

வீட்டி லொருசேய் தவழ்ந்தினிதே
விளையாடிவரு மெழிற் காண!
கூட்டமாய்ப் பத்துப் பேர்க்கூடிக்
குதுகல விருந்துண் பதுபோலாம்!

மறைத்து வைக்கும் குணமேது ?
வாதுஞ் சூதும் புரியாது !
குறைத்து நீட்டிப் பேசிடவோ
குழந்தை உலகம் அறியாது !

மக்கள் யாவருஞ் சேயானால்
மாநிலமீது போருண்டோ ?
துக்கம் பொறாமைப் பொய்யுண்டோ ?
துயர்மத சாதிப் பிரிவுண்டோ ?

மின்னுஞ் சதங்கை யொலிக்கீதம்
வீணை நாதம் சேயாற்றல் !
கன்னல் அமுதே தனித்தமிழில்
கனிந்த மழலை நறுந்தேனே !

## கண்ணின் சிறப்பு

உள்ளமதைத் தான்அளக்கும் ; ஓசையின்றி
பலபேசும் ; உணர்ச்சி காட்டும்
தெள்ளியதோர் கண்ணாடி ; நவரசமே
வழியும்வழி ; தீயோர் நல்லோர்
வெள்ளையென விளக்குமொளி : மக்களுறுப்
பிற்சிறந்த முகக்குளத்தில்
துள்ளு கெண்டை மீனனையத் துலங்குவதே
கண்களெனச் சொல்லுவாமே !

## குழந்தை வளர்ப்பு.

மாதர்பலர் குழந்தைகளைப் பெறுகின் றார்கள் !
வளர்க்கவகை யறியாமல் தவிக்கின் றார்கள் !
தீதுறுநோய் போக்கமருந் தளித்தி டாமல்
தெய்வக்குற்றம் தோஷமென்றும் மந்த்ர வாதி
பாதங்களில் குழந்தைகளின் இன்னு யிரைப்
பறிகொடுத்துக் கதறுகின்ற தாய்மா ருக்கு
ஓதுவதொன் றுண்டாயின் குழந்தை யிவ்வா
றொழிவதிலும் மலடியென வாழ்தல் நன்றாம் !

ஐந்துகண்ணன் பேய்பூதம் என்று சாற்றி
அமுதூட்டல் போலப்பெரும் பயமும் ஊட்டிச்
சந்ததமும் குழந்தைகளைக் கோழை யாக்கித்
தரணிமிசை யவர்வாழ்வைக் குறைத்தி டாமல்
அந்தமுற உடல்வளர்க்கும் முலைப்பா லோடு
அறிவுப்பால் வீரப்பால் கலந்து ஊட்டி
முந்துபழந் தமிழ்வீர மரபு காணும்
முழுப்பொறுப்பு தாய்மார்க்கு மேலும் வேண்டும் !

## பூவாரம்.

மந்திரமாவது சோறு; மானத்தைக் காப்பது ஆடை
சுந்தரமாவதுவீடு துதிக்கப் படுவது அன்பு
வெந்துயர் தீர்ப்பது கல்வி மேன்மையளிப்பதிங் கொழுக்கம்
சிந்தைகவர்வது தியாகம்; இந்த செகத்திலுயர்ந்த தறிவே!

# உழைப்பவரே வாழ்வார்!

(மீசையுள் ளாண்பிள்ளை என்ற மஸ்தான் சாயபு பாடலிசை)

பல்லவி

வீரத்திராவிடத் தோழர்களே!—வெகு
விரைவாகவே எழுந்து வாரும்!

அநுபல்லவி

கோர வறுமையினை யழிப்போம்—நம்
குணநாட்டை வேறாகப் பிரிப்போம்
காரியத்தில் கண்ணுறைச் சுகிப்போம்—பல
கைத்தொழில் கல்வியை வளர்ப்போம்—நம்மைக்
காட்டிக்கொடுப்பவர் வீழ்வார்!—தமிழ்
நாட்டுக்குழைப்பவர் வாழ்வார்! (வீ)

சரணம்

தறையினில் தமிழரில் ஒருசில மக்களைத்
தாழ்த்துவோரை நாமும் தாழ்த்துவோம்—ஒரு
குறைவின்றி நம்நாட்டை நாம்பெறும் வரையாவும்
கூடுமானத் தியாகம் புரிகுவோம்—வீணில்
இறைவன் பேரால் செலவாக்கும் பெரும்பொருளை
ஏழையர்க் குதவிடச் சாற்றுவோம்—சற்றும்
கறையில்லா மானமே உயிரினும் மேலாகக்
கருதிச்சமத்துவம் போற்றுவோம்—நம்மைக்
காட்டிக் கொடுப்பவர் வீழ்வார்!—தமிழ்
நாட்டுக் குழைப்பவர் வாழ்வார்! (வீ)

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,

பட்டம்பதவிகட்கும் சொகுசான வாழ்வுக்கும்
பஞ்சாகப்பறப்பவர் பறக்கட்டும்—தங்கள்
இட்டம்போல் மக்களை ஏணியாகக் கொண்டு
ஏறிமேலே போவோர் போகட்டும்!—பல
மட்டிக்கொள்கைகளை மக்களிடம் கூறி
வயிறுவளர்ப்பவர் வளர்க்கட்டும்—இவர்கள்
கட்டாயம் ஓர்நாள் கணக்குக் காட்டவேண்டும்
காலம் இவர்க்கு புத்தி கற்பிக்கும்—நம்மைக்
காட்டிக் கொடுப்பவர் வீழ்வார்!—தமிழ்
நாட்டுக் குழைப்பவர் வாழ்வார்! (வீ)

அறிவுக்கொவ் வாததோர் பழங்கட்டுக் கதைகளை
அக்கினிக்கேஇரை யாக்குவோம்—பொது
நெறிமிக்க மக்கட்குப் பயன்தரும் நூல்களை
நேர்மையாய் தலைமீது தூக்குவோம்—கெட்ட
வெறிமிகும் மதசாதி நச்சு மரத்தினை
வேருடன் வெட்டியே வீழ்த்துவோம்—சகுனம்
குறிக்கும் கோழைத்தனம் வினைவிதிக் கஞ்சாமல்
குணமுருகேசன்பண் ணேக்குவோம்—நம்மைக்
காட்டிக் கொடுப்பவர் வீழ்வார்!—தமிழ்
நாட்டுக் குழைப்பவர் வாழ்வார்! (வீ)

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 2 | 14 | கழகங்களா | கழகங்கள் |
| 4 | 10 | உண்மை பயனடைய | உண்மைப் பயனடைய |
| 6 | 16 | இதமின்றி துரோக | இதமின்றித் துரோக |
| 12 | 19 | ஓடியக் குண்டனை | ஓடியக் குண்டனை |
| ,, | 24 | கனமிலா செயலினை | கனமிலாச் செயலினை |
| 13 | 10 | எழுந்தது | எழுந்தன |
| 16 | 15 | மாடாய் துடிப்போர் | மாடாய்த் துடிப்போர் |
| 21 | 4 | ஒற்றைக் காலாலே | ஒற்றைக் காலாலே |
| 24 | 4 | மது குடிகள் | மதுக் குடிகள் |
| ,, | 7 | ஈ மொய்த | ஈ மொய்த்த |
| 25 | 15 | பெறுவாயடி | பெறுவாரடி |
| 26 | 20 | மணமகளைப் பார்க்க | மணமகளைப் பார்க்க |
| ,, | 21 | ஒரு நாளுங் | ஒரு நாளும் |
| 27 | 3 | அரும் மையில் | அரும் மழையில் |
| 28 | 14 | பாதிமனை யானெனும் | பாதிமனை யாளெனும் |
| 29 | 21 | பூவைய்ர் | பூவையர் |
| 30 | 15 | மல மணிகள் | பல மணிகள் |
| 31 | 1 | கைப் பெண் | கைம் பெண் |
| 33 | 28 | உடலக்கு | உடலுக்கு |

## நன்றி.

பணிநிலவு மின்நூலை வடிவாய்க் காணப்
பணமுடிப்பு வழங்கியபம் பாய்தா ராவி
திணிநிலவு சமுகநல கழகங் கட்கும்
திகழாதி திராவிடஆண் பெண்க ளுக்கும்
மணிநிலவு முகவுரையும் சிறப்புப் பாவும்
மதிப்புரை நல் கியஅறிஞர் தாய்மார் கட்கும்
அணிநிலவு மென்றனுளக் கமலம் பூத்து
அலர்ந்தபெரும் நன்றிமலர் அணிந்திட் டேனே!

—ஆசிரியர்.

Printed at The Mercantile Press, 2/45, Muthumari Chetty Street,
Mannady Madras, Q. H. No. 264-D. Copies, 1000.